தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 57 மலர் : 6

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: 2014—உருத்ரோத்காரி
(1983 செப்டம்பர் — அக்டோபர்) புரட்டாசி

MALLIKA ARTS T.J.

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

துணர் : 57 ⋮ உள்ளுறை ⋮ மலர் : 6

1. **வினைச் சொல்லும் விகுதிகளும்** 241
பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

2. **பாவேந்தரின் குடும்பவிளக்கு ஒரு நாள் நிகழ்ச்சி** 250
இராமசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்லிட்., எஸ்ஸி., பினல்., டி.எச்.இடி.,
7. தீத்தாரப்ப முதன்தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

3. **கம்பராமாயணம்-சமயச் சார்பற்ற காவியம்** 261
ம. மதியழகன் எம்.ஏ., எம்.பில்
பேரகராதித் துறை, தமிழ் பல்கலைக் கழகம்

4. **பாட வேறுபாடு - ஓர் ஆய்வு** 266
த. அழகப்பராசு, எம்.ஏ.
செ. இரா. பிரசன்னா, எம்.ஏ
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

5. **வினைத் தொகையும் பெயரெச்சமும்** 277
திரு. அ. தட்சினாமூர்த்தி, எம்.ஏ., எம்.பில்., பி.எட்
பேராசிரியர், புட்பம் கல்லூரி, பூண்டி.

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57	திருவள்ளுவர் ஆண்டு — 2014 உருத்ரோத்காரி — புரட்டாசி 1983 செப்டம்பர்—அக்டோபர்	மலர் : 6

வினைச் சொல்லும் விகுதிகளும்

பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் எம். ஏ., பி. எச். டி.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மொழி அமைப்பு

உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் தமிழ் மொழியும் ஒன்று. ஒவ்வொருமொழியும் வேறு மொழிகளிலிருந்து வேறுபட்டவை. எல்லா மொழிகளும் மனிதனால் பேசப்படுவன ஆயினும் வெவ்வேறான அமைப்புகளையும் வெவ்வேறான விதிகளையும் கொண்டவை. தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கானது அன்று. இதன் அமைப்பு பிற மொழிகளின் அமைப்பிலிருந்து வேறுபட்டது. இதனை ஒலியியல் (phonetics), ஒலியன் இயல் (phonology), உருபன் இயல் (Morphology), தொடரியல் (Syntax) போன்ற எல்லா நிலைகளிலும் காண முடியும்.

மொழிகள் தம்மிடையே அவற்றின் அமைப்பு வேறுபட்டிருப்பதைப் போலவே வளரும் ஒரே மொழியின் அமைப்பும் காலந்தோறும் மாறி வரக் காணலாம். மொழிகள் தம்மிடையே காணப்படும் அளவுக்கு இவ்வேறுபாடுகள் இல்லையாயினும் பல வேறுபாடுகளை ஒரே மொழியின் பல்வேறு கால நிலைக்களுக்கிடையேயும் காணலாம். தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கன்று. பிற மொழிகளைப் போன்று அத்துணை வேறுபாடுகள் இல்லையாயினும் வேறுபாடுகள் பலவற்றை நன்கு காணமுடியும்.

உருபன் இயல் (Morphology)

பண்டைத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் தமிழ்ச் சொற்களைப் பாகுபடுத்தும்போது அவற்றைப் பெயர், வினை, இடை உரி என நான்காகப் (Parts of speech) பாகுபடுத்தினர் என்பதை (காண்க. அகத்தியலிங்கம், 1979) நாம் அறிவோம்.

இச் சொற்களின் அக அமைப்பினை (Internal Structure) ஆராய்வதே தமிழ் உருபன் இயல் அல்லது தமிழ்ச் சொல்லியல் எனப்படும். பெயர்ச் சொற்களின் அக அமைப்பு, வினைச் சொற்களின் அக அமைப்புப் போன்ற இவற்றின் அக அமைப்புக்கள் தமிழ்மொழியின் அமைப்பை நன்குக் காட்டுவனவாக அமையும்.

தமிழில் காணப்படும் சொல் வகைகளுள் பெயரும் வினையும் மிக முக்கியமானவை. இதனால்தான் தொல்காப்பியரும்

"சொல்லெனப்படுப பெயரே வினையென்
றாயிரண்டென்ப அறிந்திசினோரே"

என்று கூறிச் சென்றார்.

வினைச்சொல் (Verb)

பொருள் அடிப்படை விளக்கம்

வினைச் சொற்கள் ஒரு செயலினைக் காட்டும் என்பது இலக்கண அறிஞர்களின் கொள்கையாகும். இக்கருத்தினைத்தான் பிளேட்டோ (429-327) போன்ற அறிஞர்களும் கொண்டிருந்தனர்.

''Verbs' were terms which could express action''

(Lyons, 1971 : 10)

என அவர் கூறியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது. வினைச் சொற்கள் பொதுவாகத் தொழிலுடன் தொடர்புடையன என்பது உலக அறிஞர்களின் எண்ணம். இதே எண்ணத்தினைத் தமிழ் இலக்கண

அறிஞர்களிடையேயும் காண்கிறோம். இதனால்தான் இவர்கள் வினைச்சொல்லைத் ''தொழிற்சொல்'' (தொல். 156) ''தொழில்'' (தொல். 618) என்றெல்லாம் கூறிச்சென்றனர். தெய்வச்சிலையாரும்.

''வினை என்பது தொழிலை உணர்த்தும் சொல்லாதலின்'' (தெய். 192) எனக் கூறுவதும் காண்க. தொழிலைக் கூறுமுகத்தான் இலக்கண விளக்க ஆசிரியரும்.

''பொருட்புடை பெயர்ச்சி புலப்படுப்பதுவே'' (இ. வி. 227)

எனக் கூறிப்போந்தார் எனக் கருதலாம். பல வினைகள் பொருட்புடை பெயர்ச்சியைக் குறிப்பனவே. நட, நகர், போன்ற வினைகள் பொருட்புடை பெயர்ச்சியைக் குறிப்பனதான், எனினும் வேறுபல வினைகள் பொருட்புடை பெயர்சசியைக் குறிப்பிடுவதில்லை. இந்நிலையில் வினைச்சொல் தொழிலைக் காட்டுவது எனக் கூறுவது ஓரளவுக்கேனும் பொருந்தும் என்று கருதுவர் பலர். நினை, எண்ணு, மற போன்ற வினைகள் புடை பெயர்ச்சியைக் காட்டுவதில்லை. மேலும் சில வினைகள் பொருள்களின் நிலையைக் (State) குறிப்பிடுவனவாக உள்ளன. குளிர், பசி போன்ற வினைகள் இத்தகையனவாகும். எனவே எல்லா வினைகளின் பண்பையும் விளக்கும் நிலையில் ஒரு விளக்கத்தைக் காண்பது அத்தனை எளிதன்று. ஜெஸ்பர்சன் (1955: 86) போன்ற இலக்கண ஆசிரியர்கள் வினைச்சொல் வேறு சில பண்புகளையும் கொண்டன என்பர்[1] எனவேதான் பொதுவாக வினைச்சொல் ஒரு தொழிலைக் காட்டுவது எனப் பலர் கூறிப்போந்தனர். இத்தகைய விளக்கம் வினைச் சொற்களின் பொருளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அமைப்பு அடிப்படை விளக்கம்

அமைப்பு அடிப்படையிலும் ஒரு சில விளக்கங்களைத் தந்து நிற்பர் இலக்கண ஆசிரியர்கள்

1. 'As for their meaning, Verbs are what sweet calls phenomeon words and may be broadly divided into those that denote action [he eats, breathes, kills, speaks. etc.] those that denote some process [he becomes,grows, loses.dies etc.]and those thatdenote some state or condition[he sleeps,remains, waits,lives, suffers etc.] though there are some verbs which it is difficult to include in any one of these classes [he resists, scorns, pleases"].

வாக்கியங்களின் பயனிலையாக வருவது வினை என்றும் கூறுவர் சிலர். பிளேட்டோ தன்னுடைய விளக்கத்தில்

"Verbs were terms which could express the action or equality predicated" (Lyons, ibid p. 10)

என்று கூறுவார். அமைப்பு அடிப்படை என்றாலே எல்லா மொழிகளுக்கும் பொருந்த வேண்டும் என்ற நியதி இல்லை. ஒவ்வொரு மொழியும் தனித்தனி அமைப்பைக் கொண்டது. எனவே ஒரு மொழிக்குப் பொருந்துவது இன்னொரு மொழிக்குப் பொருந்தவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கிரேக்க மொழியைப் பொறுத்த மட்டில் இவ்விளக்கம் பொருந்தலாம். தமிழில் கூட

அவன் கண்ணன்
நான் அண்ணன்

போன்ற வாக்கியங்களில் கண்ணன், அண்ணன் போன்றவற்றையே பயனிலையாகக் கருதுகிறோம். இதைப் பெயர்ப் பயனிலை என்கிறோம். எனவே பயனிலையாக வருவன அனைத்தும் வினையாக இருக்க வேண்டியதில்லை எனக் கருதலாம். இதே நிலையினைத்தான் வேறு பல விளக்கங்களிலும் காண்கிறோம். பால் காட்டும் விகுதிகளையும் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களைக் காட்டும் விகுதிகளையும் ஏற்று வரும் என்ற விளக்கங்களெல்லாம் இத்தகையனவே.

எனினும்பொதுவாக வினைகள் காலம் காட்டும் தன்மையன் என்பதை நாம் அறிவோம். உலக மொழிகளில் பெரும்பான்மையான மொழிகளில் காணப்படும் வினைச்சொற்கள் காலம் காட்டி நிற்கின்றன. தனிநிலை மொழிகள் (Isolating) எனக் கருதப்படும் ஒரு சில மொழிகளில் மட்டுமே இப்பண்பு காணப்படுவதில்லை. எனவேதான் மேனாட்டு அறிஞர்களும் கீழை நாட்டு அறிஞர்களும் காலம் காட்டுதல் வினைச்சொல்லின் பண்பு என எண்ணி அதனை அதன் விளக்கமாகக் கொடுத்துள்ளனர். கிரேக்க இலக்கணியான திரேக்ஸ் (Dionysius Thrax) என்பார்.

"The verb is a part of speech without case inflections, admitting inflections of tense, persons and number, signifying an activity or a being acted upon" (Lyons, ibid, 319)

எனக் கூறிப் போந்தமை உணரத்தக்கது. இந்த விளக்கமே பெரும்பாலான மேனாட்டு இலக்கணிகளால் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு விளக்கம்.

இதே நிலையினைத்தான் கீழை நாட்டு இலக்கணங்களிலும் காண்கிறோம். தொல்காப்பியர்

''வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும்''

என்ற நூற்பாவில் ''வினைச் சொல் வேற்றுமையை ஏற்காது என்றும் காலத்தைக் காட்டும் என்றும் குறிப்பிடுகிறார். இச்சூத்திரத்துக்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர்கள் இந்நூற்பாவே வினையின் பொது இலக்கணம் உணர்த்துகின்றது எனக் கருதுகின்றனர்.

''உணர்த்தப்படும் வினைச் சொற்கெல்லாம்
பொதுவிலக்கண முணர்த்தியவாறு''

எனச் சேனாவரையரும், அவரைப் பின்பற்றி

''இச்சூத்திரம், வினைச் சொற்கெல்லாம் பொது
இலக்கணம் உணர்த்துகின்றது''

என நச்சினார்க்கினியரும்,

''இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின்
வினைச்சொல் இலக்கணம் பொதுவகையான்
உணர்த்துதல் நுதலிற்று''

எனத் தெய்வச்சிலையாரும் கூறுதல் காண்க. எனவே தொல்காப்பியர் இச் சூத்திரத்திலேயே வினைச்சொல் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தந்து நிற்கிறார் எனக் கருதலாம். இதனால் தான் தொல்காப்பியரும் வினையைக் ''காலக்கிளவி'' (692) எனக் கூறிப் போந்தார்.

பொருள் அடிப்படையில் இது தொழிலைக் குறிக்கும் என்ற விளக்கத்தைத் தரவில்லையே என்ற எண்ணம் நமக்கு எழுவது இயற்கையே. இந்நிலையில்தான் சிலர் வேற்றுமை மயங்கியலில் காணப்படும்.

''வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபயன் ஆக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின் முதனிலையே

(தொல். 596)

என்ற சூத்திரத்தின் மூலம் விளக்கம் தந்துள்ளார் எனக் கருதுவர். நன்னூலாரும் இது கருதியே

''செய்பவன் கருவி நிலஞ் செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே'' (நன். 320)

எனக் கூறிப்போந்தார் வினை என்பது மேற்கூறிய ஆறையும் தருவது என்பது அவர் கருத்து. இக்கருத்து பொருந்தாது என்பதைப் பலரும் (கோதண்டராமன் 1972 : 205) ஆங்காங்கே விளக்கியுள்ளார். ஒரு வினைச்சொல் பயனிலையாக வர மேற்கூறிய எட்டும் வரலாம் என்பதே இச்சூத்திரத்தின் பொருள் எனக் கருதலாம். இதனால்தான் நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் மேலே கண்ட சூத்திரம் வேற்றுமைப் பொருள் உணர்த்துகின்றது எனக் கூறி நிற்கின்றனரே அன்றி வினைச்சொல் என்றால் என்ன என்ற விளக்கத்தைத் தந்து நிற்கிறது எனக் கூறவில்லை.

''இது வேற்றுமைப் பொருள்கள் தோன்றும் இடம் கூறு கின்றது'' (113) என நச்சினார்க்கினியரும் எழுவகை வேற்றுமை யிலும் காரக வேற்றுமை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று'' எனத் தெய்வச்சிலையாரும் (109) கூறா நிற்பர். ஆனால் இளம் பூரணரோ இச்சூத்திரம்

''வினைச் சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று'' (108) எனக் கூறுவார். இதனால்தான் இவரைப் பின்பற்றும் நன்னூலாரும் (இன்னதற்கு. இதுபயன் ஆகிய இரண்டையும் விடுத்து) ''செய் பொருள் ஆறும் தருவது வினையே" என வினைக்கு இலக்கணம் கூறுவது போலக் கூறி நின்றார் எனக்கருதலாம்.

தொல்காப்பியருக்கு இது கருத்தாயின் பெயருக்கு இலக்கணம் கூறிய அதே பாணியில் (''பெயரெனப் படுவது" எனக் கூறியது போன்று வினைக்கும் '' வினையெனப்படுவது " எனக் கூறியிருக்க மாட்டார்.

மேலும் தொல்காப்பியர் பெயரெச்சம் பற்றிக் கூறும்போதும் இன்னதற்கு. இது பயன் இரண்டையும் விடுத்து.

''நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்தவென்னுஞ் சொல்லே''

(தொல். 719)

என்ற நூற்பாவில் பெயரெச்சம் கொண்டு முடியும் பெயர்களின் வேற்றுமைத் தொடர்புகளைக் கூறுகிறார். இதற்குக் காரணம் பெயரெச்சங்கள் பெரும்பாலும் இவற்றையே கொண்டு முடிவது தான் (விளக்கம். கோதண்டராமன் 1972 : 205 இல் காண்க). வினையின் இலக்கணம் முந்திய சூத்திரத்தில் கூறியிருப்பாராயின்

அதே இலக்கணம் எச்சங்களுக்கும் பொருந்தும். எச்சங்களும் வினையே.

எச்சத்திற்கு, இன்னதற்கு, இதுபயன் ஆகியவற்றை விடுத்துக் கூறியிருப்பதிலிருந்தே வினையிலக்கணத்தை 'வினையே...'' என்ற சூத்திரத்தில் கூறவில்லை என்றும் அதில் வினையோடு வரும் வேற்றுமைகள் பற்றியே கூறியுள்ளார், என்றும் எண்ணலாம்.

ஆனால் நன்னூலார் இச்சூத்திரத்தை அடிப்படையாக வைத்து இன்னதற்கு இதுபயன் இரண்டையும் விடுத்து இந்த ஆறு பொருளையே தன்னுடைய சூத்திரத்தில் கொண்டு வினையின் விளக்கம் போலக் கூறியுள்ளார் எனக் கருதலாம்.

ஆனால் நேமிநாதம் தொல்காப்பியத்தை நன்குப் புரிந்த நிலையில்தான் எட்டையும் தருவது வினை என்ற விளக்கத்தைக் கொள்ளாமல் வினையை,

''இறப்பு நிகழ்வெதிர்வாங் காலங்கள் ஏற்றும்
குறிப்பு உருபேற்றல் கூடாத் திறத்ததுமாய்
முற்றெச்ச மென்றிரண்டாய் மூவகைத்தாய் மூன்றிடத்து
நிற்கும் வினைச் சொற்கள் நேர்ந்து'' (நேமி. 63)

எனக் கூறி நிற்கிறது. தொல்காப்பியம் கூறிய காலம் ஏற்றல், உருபேலாமை ஆகியவற்றோடு எச்சம், முற்று என்ற பகுப்பையும் கொண்டு மூவகையினதாய் மூன்றிடத்திலும் வரும் எனச் சிறிது விளக்கி நிற்கும்.

இலக்கண விளக்க ஆசிரியர் தொல்காப்பியர் கருத்துடன் ஒன்றி
'' வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும்
பொருட்புடை பெயர்ச்சி புலப்படுப்பதுவே' (இ.வி. 227)

எனக் கூறியுள்ளமை பொருள் அடிப்படையிலும் இலக்கணம் வகுத்தல் வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே ஆகும். நச்சினார்க்கினியரும் ''தொழிலாவது. பொருளினது புடைப்பெயர்ச்சி'' 202) எனக் கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

எனவே இதுகாறும் கூறியவற்றால் தமிழ் இலக்கணங்கள் வினையைப் பொருள் அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் விளக்க முற்பட்டுள்ளன என்பதும் அந்நிலையில் உலக இலக்கணிகளிடம் ஒரு ஒருமைப்பாடு உள்ளது என்பதும் நன்கு விளங்கும்.

இலக்கணக் கூறுகள் (Gramatical categories)

சொல் வகைகளைப் போலவே மொழிகளில் பல்வேறு இலக்கணக் கூறுகளும் உள்ளன. சொற்கள் பல்வேறு இலக்கணக் கூறுகளைக் காட்டுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக ''வந்தான்" என்ற சொல் வருதல் தொழிலைக் காட்டுவதுடன் அத்தொழில் சொல்லுவதற்கு முன்னால் செய்யப்பட்டது என்றும், அதனைச் செய்தது ஒரு ஆண் என்பதையும் காட்டுகின்றது. எனவே இவ்விரண்டையும் இலக்கணக் கூறுகள் என்கிறோம். பொதுவாக இலக்கணக் கூறுகள் அடிச்சொற்களால் காட்டப்படுவதில்லை. ஒட்டுக் களாலும் பிறவற்றாலும் காட்டப்படும். தமிழ் வினைச் சொற்களில் பல்வேறு இலக்கணக் கூறுகளைக் காண்கிறோம்.

பால், காலம், எச்சம், நிபந்தனை (காண்க: அகத்தியலிங்கம், 1982) போன்ற பல்வேறு இலக்கணக் கூறுகளைக் காணலாம். இவையனைத்தும் தமிழ் மொழியில் பெரும்பாலும் ஒட்டுக்களாலேயே காட்டப்படுகின்றன. இவற்றையெல்லாம் காட்டிடப் பலவேறு ஒட்டுக் கள் தமிழ் மொழியில் உள்ளன. எனவேதான் தமிழை ஒரு ஒட்டு மொழி என்று (agglutinative) என்று கூறுகின்றோம்.

விகுதிகள்

தமிழ் வினைச் சொற்களில் காணப்படும் இலக்கணக்கூறுகளில் பால்காட்டும்விகுதிகளும் அடங்கும். உலக மொழிகள்பலவற்றில் இப் பால் காட்டும் விகுதிகளைக் காணலாம். திராவிட மொழிகளில் மலையாளம் நீங்கலாகஉள்ளபிற மொழிகள் அனைத்திலும் இவ்விகுதி கள் உள்ளமை கண்கூடு. மலையாளமொழியில் இன்றுவினைமுற்றுக் களில் விகுதிகள் காணப்படாவிடினும் வினையாலணையும் பெயர் களில் உள்ளன. பழைய மலையாள மொழியில் இவ்விகுதிகள் இருந்தன என்றும் காலப்போக்கில் மறைந்துவிட்டன என்றும் கருதுவர். இது போன்றே ஒரு சில மொழிகளும் முன்னால் இவ் விகுதிகளைக் கொண்டிருந்தன என்பதும், பின்னர் அவற்றை இழந்து விட்டன என்பதும், அம்மொழிகளின் வரலாற்றைப் படிப் போருக்குத் தெரியவரும். இதற்குக் காரணம் இவ்விகுதிகள் இன்றியே கருத்துக்களை உணர்த்த முடிவதுதான் என எண்ணலாம். எடுத்துக்காட்டாக இன்றைய ஆங்கில மொழியில்

He came She came

போன்ற வாக்கியங்களில் விகுதிகள் இல்லை. விகுதிகள் இன்றியே எழுவாயின் உதவியால் வந்தது யார் என்பதை நம்மால் உணர முடியும். எழுவாய் இல்லாத நிலையில்தான் விகுதிகளின் உதவி தேவைப்படுகின்றது.

வந்தான் வந்தாள்

போன்ற சொற்களில் காணப்படும் விகுதிகளால் வந்தது ஆண் அல்லது பெண் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். ஆனால் எழுவாய் இருந்துவிட்டால் விகுதியின் தேவை இல்லாமல் ஆகிவிடு கின்றது.

பதிலீடு பெயர்களும் விகுதிகளும்

பொதுவாக வினையில் காணப்படும் விகுதிகள் பதிலீடு பெயர் களைப் பிரதிபலித்து நிற்பவைகளாகவே உள்ளன. தமிழில் காணப் படும் பதிலீடு பெயர்களுக்கும் விகுதிகளுக்குமிடையே மிகுந்த தொடர்பு இருப்பதைக் காணலாம். தன்மை முன்னிலை, படர்க்கை என மூவிடப் பெயர்களை நாம் பிரிப்பதும், அவற்றையும் பின்னர்த் தன்மை ஒருமை, தன்மைப்பன்மை, முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை எனப் பல்வேறு வகைகளாகப் பிரிப்பதும்இங்கு நினைவுகூரத்தக்கன. இத்தகைய பிரிவினைக்கும் வினையில் காணப் படும் விகுதிகளுக்குமிடையே ஒரு தொடர்பினைக் காணமுடிகிறது.

தன்மை பதிலீடு பெயர்களும் விகுதிகளும்

தன்மையில் ஒருமை, பன்மை எனப் பிரித்துப் பின்னர், பன்மையை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (inclusive plural) என்றும், விலக்கீட்டுத் தன்மைப்பன்மை (exclusive plural) என்றும் பிரிப்பர். இன்றையத் தமிழில் நான், நாம், நாங்கள் என்பவை முறையே இவற்றைக் காட்டும் பதிலீடுபெயர்களாகும், பண்டைத் தமிழில் யான், நாம், யாம் என்பவை முறையே இவற்றைக் காட்டும் என்பர்.

''யான் யாம் நாம் என வரூஉம் பெயரும்" (647) என்பது தொல்காப்பியம். இதற்கு உரை எழுதப் போந்த நச்சினார்க்கினியர் ''யான் என்னும் தனித்தன்மைப் பெயர் ஒன்றும், யாம் என்னும் படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும். நாம்" என்னும் முன்னிலை உளப்பாட்டுத் தன்மைப் பெயர்ஒன்றும்" என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இப்பெயர்களின் பிரதிபலிப்பையே நாம் தன்மை விகுதிகளில் காண்கிறோம்.

தன்மை ஒருமை, தன்மைப் பன்மை விகுதிகள் வினைச் சொல்லில் காணப்படுகின்றன. தன்மைப் பதிலிடுபெயர்கள் ஆண், பெண் வேற்றுமை காட்டுவதில்லை. இவற்றைப் போன்றே தன்மை விகுதிகளும் ஆண், பெண் வேற்றுமை காட்டாமல் எண் வேற்றுமையையே காட்டும் தன்மைப் பன்மையில் (விகுதியில்) உளப்

பாட்டுத் தன்மையும் விலக்கீட்டுத் தன்மையும் சங்ககால இலக்கியங்களில் அழித்துவிட்ட நிலையைக் காண்கிறோம் (பிரிவு 5, 3)ஆனால் பழந்திராவிட மொழியில் இருந்ததாக என்ண இடம் உண்டு. எனவே பதிலிடுபெயர்கள் எவ்வாறு உள்ளனவோ அவ்வாறே விகுதிகளும் அமைந்துள்ளன எனக் கருதலாம்.

முன்னிலைப் பதிலிடு பெயர்களும் விகுதிகளும்

தன்மையைப் போன்றே முன்னிலையும் காணப்படுகின்றது. முன்னிலையில் ஒருமை, பன்மை என்ற என் வேற்றுமையைக் காண்கிறோம். நீ, நீர், நீயிர் ஆகிய முன்னிலைப் பெயர்களைப் பிரதிபலிப்பனவாக முன்னிலை விகுதிகளும் உள்ளன. விகுதியிலும் ஒருமை, பன்மை வேற்றுமையே உள்ளது. ஆண், பெண் வேற்றுமை இல்லை.

படர்க்கைப் பதிலிடுபெயர்களும் விகுதிகளும்

படர்க்கையில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் பதிலிடு பெயர்களையே தமிழ் மொழியில் காண்கிறோம்.

அவன் இவன் உவன் — *ஆண்பால்*
அவள் இவள் உவள் — *பெண்பால்*
அவர் இவர் உவர் — *பலர்பால்*
அது இது உது — *ஒன்றன்பால்*
அவை இவை உவை — *பலவின்பால்*

படர்க்கை வினைகளில் வரும் விகுதிகளும் இவற்றையே பிரதிபலித்து நிற்கின்றன.

உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்கள்

சில பன்மைப் பெயர்கள் உயர்வு காட்டி நிற்கின்ற நிலையில் அவற்றைப் பிரதிபலித்து நிற்கும் பன்மை விகுதிகளும் உயர்வு ஒருமையைக் கட்டுவனவாக உள்ளமையும் இங்கு நினைவு கூரத்தக்கது. தற்காலத் தமிழில்

அவர் வந்தார்	***இவர் வந்தார்***
நீர் வந்தீர்	***நீங்கள் வந்தீர்கள்***
தாங்கள் வந்தீர்கள்	***நீர் வாரும்***
நீங்கள் வாருங்கள்	***தாங்கள் வாருங்கள்***

போன்ற எடுத்துக் காட்டுகள் இப்பண்பைக் காட்டும். பண்டைத் தமிழிலும் இத்தகைய உயர்வு ஒருமை விகுதிகளைக் காண முடியும்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் வினையில் காணப்படும் விகுதிகள் பெயர்ச்சொற்களில் காணப்படும் திணை, எண், பால் பகுப்பைப் பிரதிபலித்து (பதிலிடு பெயர்களை அடிப்படையாக வைத்து) நிற்பவை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இத்திணையின் பகுப்பும் பதிலிடுபெயரை அடிப்படையாகக் கொண்டது என்பதும் உணரற்பாலது. எனவேதான் விகுதிகள் இவற்றைப் பிரதிபலித்து நிற்கின்றன எனக் கருதுகிறோம்.

எனினும் பதிலீடு பெயர்களில் காணப்படும் எல்லாப் பகுப்பும் வினையில் பிரதிபலிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எடுத்துக்காட்டாக அவன், இவன், உவன் என்ற மூன்று பகுப்பு இருப்பினும் (சங்ககாலத் தமிழில்) வினையில் இவை அனைத்தையும் விகுதிகள் பிரதிபலிப்பதில்லை. அண்மை, சேய்மை, இடைமை என்ற பகுப்பை வினைச்சொல்லில் காண முடிவதில்லை. எல்லாவற்றிற்கும் பொதுவாகவே ஆண்பால் உள்ளன.

அவன் வந்தான் / வந்தனன்
இவன் வந்தான் / வந்தனன்
உவன் வந்தான் / வந்தனன்

இதே நிலையினைத்தான் பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் விகுதிகளிலும் காண்கிறோம். நீங்கள், தாங்கள் என்ற இரு பெயர்களும் தம்முள் வேற்றுமை உடையவை. ஆனால் அவை ஒரே விகுதியையே எடுக்கும்.

நீங்கள் வந்தீர்கள் தாங்கள் வந்தீர்கள்

எனவே பதிலீடுபெயர்களில் வருவன அனைத்தும் வினையில் பிரதிபலிக்க வேண்டியதில்லை. ஆனால் வினையில் இருக்கும் வேறுபாடுகள் பொதுவாகப் பதிலீடுபெயர்களில் இருக்கும். இதற்கு விதிவிலக்காகத் தான், தாம் என்பவை பண்டைத் தமிழில் காணப்படுகின்றது.

புறநிலைக் கூறு

எழுவாயின் பிரதிபலிப்பு : எழுவாயே அடிப்படை

வினையில் காணப்படும் விகுதிகள் அனைத்தும் புறநிலைக்

(surface) கூறுகளே. இவ்விகுதிகள் எழுவாயைப் பிரதிபலித்து நிற்பன என்பதும், அவற்றிற்கேற்பவே அமைகின்றன என்பதும் இங்கு உணரத்தக்கன. இவை அனைத்தும் எழுவாய்கேற்ப வருபவையாகும். எழுவாயே இவற்றை நிர்ணயிக்கின்றது. எழுவாய் எது என்று தெரிந்த மாத்திரத்திலேயே விகுதியையும் நிர்ணயித்து விடுகிறோம். எழுவாய் ஆண்பால் ஆயின் விகுதியும் ஆண்பாலாக இருக்கும். எழுவாய் பெண்பால் ஆயின் விகுதியும் பெண்பாலாக இருக்கும்.

ஒரு தொழிலைச் செய்வது ஆண்பால் பெயராயின் எந்தவித ஐயப்பாடுமின்றி ஆண்பால் விகுதியை இணைத்து விடுகிறோம். பெண்பால் ஆயின் பெண்பால் விகுதியை இணைப்போம். எந்த விகுதி என நிர்ணயம் செய்வது எழுவாயே.

கண்ணன் செய்தான்	குழலி செய்தாள்
நான் செய்தேன்	நீ செய்தாய்

எனவேதான் எழுவாய் அடிப்படையாக (புதை நிலையில்) உள்ளது. அவற்றை ஒட்டியே அல்லது அவற்றை அடிப்படையாகக் கொண்டே வினையில் விகுதிகள் அமைகின்றன என்றும் கூறலாம். இதனால் தான் இவற்றைப் புறநிலைக்கூறு என்று கருதுகிறோம்.

ஒரு இலக்கணக் கூறு இன்னொன்றை நிர்ணயம்செய்யுமாயின் முன்னதைப் புதைநிலைக்கூறு (deep) என்றும் பின்னதைப் புற நிலைக்கூறு (Surface) என்றும் கூறலாம்.

சில மொழிகளில் இல்லாமை

மேலும் இக்கூறுகள் (விகுதிகள்) எல்லா மொழிகளிலும் காணப் படுவதில்லை. தமிழில் இக்கூறுகள் கலப்பட மலையாள மொழியில் காணப்படுவதில்லை.

நான் வந்தேன்	நீ வந்தாய்
அவன் வந்தான்	அவள் வந்தாள்

என்றெல்லாம் பலவேறு விகுதிகளுடன் கூறுவதை

தான்
நீ
அவன்
அவள்
} வந்நு

என எந்தவித விகுதியுமின்றிக் கூறிவிடக் காண்கிறோம். எனினும்

வந்தது யார் என எழுவாயிலிருந்து அறிந்துகொள்ள முடியும். விகுதிகள் கட்டாயம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எத்தனையோ இனமொழிகளில் இவை இருப்பதில்லை. ஒரே இன மொழிகளிலும் ஒரு மொழியில் இருக்க இன்னொரு மொழியில் இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை.

ஒரே மொழியில் எல்லா இடங்களிலும் இல்லாமை

மேலும் ஒரே மொழியிலும் எல்லாவிடங்களிலும் காணப்பட வேண்டியதில்லை.

அவன் வரும்	அவள் வரும்
அது வரும்	அவை வரும்

என்பனவற்றில் தனித்தனியாக விகுதிகள் இல்லை என்பதும் எனினும் அவை இலக்கணப் பிழையின்றி உள்ளவை என்பதும் உணரத்தக்கன.

ஒரு சில இடங்களில் மறைந்துவிடுதல்

ஒரே மொழியிலும் சில காலங்களில் இருந்து மறைந்து விடவும் காணலாம். பண்டைத் தமிழ் இலக்கியங்களில்

அவன் இலன்	அவள் இலள்
அவர் இலர்	அது இலது
அவை இல	

என வழங்கியவை இன்று

அவன், அவள், அவர், அது, அவை } இல்லை

என வழங்குவது காண்க. அந்த நிலையினை மலையாள மொழியிலும் காண்க. பழைய மலையாள மொழியில் விகுதிகள் இருந்து பின்னர் மறைந்து விட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆனால் எல்லா மொழிகளிலும் எழுவாய் இருக்கும். அதுவே விகுதியை நிர்ணயம் செய்வது. எழுவாய் தெரிந்த மாத்திரத்தில்

விகுதி எது என நிர்ணயம் செய்துவிடுகிற நிலையில்தான் முன்னதை புதைநிலை என்றும், பின்னதைப் புறநிலை என்றும் கூறுகிறோம்.

உருபனும் உருபுகளும்

எழுவாயை அடிப்படையாகக் கொண்டே விகுதி உருபங்களை நிர்ணயிக்கிறோம். எழுவாய் ஆண்பாலாயின் விகுதியில் வருவதும் ஆண்பால் உருபனே. பெண்பாலாயின் பெண்பால் உருபன். பலர் பாலாயின் பலர்பால் உருபன். இதனைக் கீழ் வருமாறு காட்டலாம்.

ஆண்பால் பெயர் வினை —→ ஆண்பால் பெயர் + வினை
+ ஆண்பால் உருபன்

கண்ணன் வந்த் —→ கண்ணன் வந்த் + ஆன்

உருபன் (morpheme) எது என நிர்ணயம் செய்வது எழுவாயே. ஆனால் உருபுகளை (allomorph)) நிர்ணயம் செய்வது எழுவாய் அன்று.

எடுத்துக்காட்டாக, தன்மை ஒருமை எழுவாய் வரும்போது விகுதியும் தன்மை ஒருமை உருபனைக் கொண்டு வரவேண்டும். தன்மைப் பன்மையையோ அல்லது பிற உருபனையோ கொண்டு வர முடியாது. நான் என்பது எழுவாய். அதனால் விகுதியும் தன்மை ஒருமையாகவே இருத்தல் வேண்டும். தன்மை ஒருமை உருபுகளாக பண்டைத் தமிழில் -ஏன், -என், -அன். -அல் போன்றவற்றைக் காண்கிறோம். இவற்றுள் எதை எடுப்பது என்பதை நிர்ணயம் செய்வது வினைச் சொல்லில் காணப்படும் பல்வேறு சூழல்களே யன்றி எழுவாய் அன்று. எடுத்துக்காட்டாக -என், -அன் ஆகியவை இறந்த காலத்தைக் காட்டும் இடை நிலைகளுக்குப் பின்னர் -அன் சாரியை வந்தால்தான் இறந்த காலச் சொற்களில் வரும். இல்லையேல் வராது.

வந்த + அன் + { அன் / என் }

இதுபோன்றே-அல் எதிர்காலச் சொற்களில் மட்டுமே வரும்.

{ வரு + வ் / கொடுப் + ப் } + அல்

இதே நிலையைத்தான் பிற விகுதிகளிலும் காண்கிறோம். எனவே உருபனை நிர்ணயிப்பது எழுவாய் என்பதும் (தொடரியல்)

உருபுகளை நிர்ணயிப்பது வினைச்சொல்லில் காணப்படும் பலவேறு சூழல்கள் (சொல்லியல்) என்பதும் உணரத்தக்கன.

இதே நிலையைத்தான் கால இடைநிலைகள் போன்ற பிற இலக்கணக்கூறுகளிலும் காண்கிறோம். என்ன காலம் என்று நிர்ணயிப்பது வாக்கியத்தில் வரும் நேரக்கிளவிகள் என்பதும், -ந்த்-, -த்-, -இன்- போன்ற இடைநிலைகளில் எதைக் கொள்ளுவது என நிர்ணயிப்பது வினைகளே (verb stem) என்பதும் உணரத்தக்க செய்திகள்.

வினைமுற்றும் வினையாலணையும் பெயரும்

தமிழில் பால்காட்டும் விகுதிகளை வினைமுற்றுக்களிலும், வினையாலணையும் பெயர்களிலும் மட்டுமே காணமுடிகின்றது. பிற வினைக்கூறுகளில் விகுதிகள் வருவதில்லை. முற்றெச்சம் என அழைக்கப்படும் கூறுகளிலும் விகுதிகள் வரக் காண்கிறோம். அவையும் ஒருவகை வினைமுற்றுக்களே.

வந்தான் சென்றான்

என்ற தொடர் வந்து சென்றான் என்று பொருள்பட்டு நிற்பினும் வந்தான் என்பது சொல்லியலில் அடிப்படையில் முற்றே. இதே நிலையினைத்தான்,

வந்தாள் சென்றாள் வந்தார் சென்றார்

போன்ற தொடர்களிலும் காண்கிறோம்.

பல விகுதிகள் வினைமுற்றுக்களிலும், வினையாலணையும் பெயர்களிலும் வந்தாலும் சிலவிகுதிகள் வினைமுற்றுக்களில் அதிகமாகவும் இன்னும் சில வினையாலணையும் பெயர்களில் அதிகமாகவும் வரும். –ஓன், –ஓள், –ஓர் ஆகிய ஒட்டுக்கள் வினை முற்றிலும், வினையாலணையும் பெயர்களிலும் வரினும் வினையாலணையும் பெயர்களிலேயே அதிகமாக வருகின்றன.

இன்னும் சில ஒட்டுக்கள் வினையாலணையும் பெயர்களில் வருவதில்லை. 'செய்யும்' என்னும் வினைமுற்று முற்றாக வருமேயன்றி வினையாலணையும் பெயராக வருவதேயில்லை. இப்பண்பை வேறு சில ஒட்டுக்களிலும் காணலாம்.

சங்க இலக்கியங்களில் தன்மையிலும் முன்னிலையிலும் மிகக் குறைவாகவே வினையாலணையும் பெயர்கள் உள்ளன. தன்மை

ஒருமை, பன்மை ஆகியவற்றில் பத்துக்கும் குறைவாகவே உள்ளன. முன்னிலையிலும் பன்மையில் குறைவே, ஒருமையில் விளியாகச் சிறிது கூடுதலாக வருகின்றன. ஆனால் படர்க்கையில் அதிகமாக இவை வரும்.

மாற்று விதியால் வருவனவே

இத்தகைய விகுதிகள் எழுவாய்க்கு ஏற்ப சில விகுதிகளால் வரும் கூறுகளே, எழுவாய் நிர்ணயிக்கும் நிலையில் அவற்றைச் சில விகுதிகளால் கொண்டு வருவர் மாற்றிலக்கண ஆசிரியர்கள்.

கண்ணன் நேற்று வந்தான்

என்ற வாக்கியம் கண்ணன் நேற்று வருதலைச் செய்தான் என்ற பொருளில் முதன் முதலாக

கண்ணன் நேற்று வா

என்ற புதைநிலையிலிருந்து

கண்ணன் நேற்று வா + இறந்த காலம் + விகுதி

என்றும் ஆகிப் பின்னர்

கண்ணன் நேற்று வந்தான்

என ஆகியிருக்கக் காண்கிறோம். எனவே விகுதி, எழுவாய்க்கு ஏற்ப மாற்றுவிதி (transformation) ஒன்றால் வருவதே எனக் கருதலாம். இதே நிலையைத்தான் பலவேறு இடைநிலைகளிலும் காண்கிறோம்.

புறநிலையாயினும் இக்கூறுகள் மொழிகளில் முக்கியமான பங்கு வகித்தல் உண்டு. வேண்டாத கூறு எனக் கருதினும் பல மொழிகள் இதனைக் கொண்டிருத்தல் காண்கிறோம். எழுவாய் எது என்று கேட்காவிடினும் ஆண்பால், பெண்பால் என்றெல்லாம் வினையிலிருந்தே அறிந்துகொள்ளமுடியும். மொழிகளில் காணப்படும் பல கூறுகள் இப்பண்பினைக் கொண்டவையே. தமிழ் மொழியில் காணப்படும் விகுதிகள், கால இடைநிலைகள் போன்றவை இத்தகையனவே.

மேலும் இத்தகைய மொழிகளில் எழுவாய் புறநிலையில் இல்லாத வாக்கியங்கள் பல இருப்பதற்குக் காரணமும் விகுதிகளே.

வந்தேன் வந்தான்
சென்றாள் சென்றான்

போன்ற எழுவாய் இல்லாத வாக்கியங்களைக் காணமுடியும். முதலில் எழுவாய் இருந்து பின்னர் விகுதிகள் உண்டாகிப் பின்னால் எழுவாய் மறைந்துவிடுவதாலேயே இத்தகைய வாக்கியங்கள் உண்டாகின்றன எனக் கருதலாம்.

யாரோ ஒருவன் வந்த் →
யாரோ ஒருவன் வந்தான் →
வந்தான்

என்பது இப்பண்பை விளக்கும்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் வினைச்சொல்லின் விளக்கத்தையும் அவற்றில் காணப்படும் விகுதிகள் எவ்வாறு உருவாகின்றன என்பதையும் கண்டோம்.

துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1979 சொல்லியல்-1, பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.
1982 வினையியல். ,,

Lyons, John, 1968, Introduction to Theoretical Linguistics, Cambridge University press, Cambridge.

Kothandaraman, P. 1972, " Studies in Tamil Linguistics", Tamil Nuulagam, Madras.

Jesperson, otto 1955, A Modern English Grammar on Historical Principles, George Allen & Unwin Ltd., London.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பாவேந்தரின் குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சி

பழந் தமிழ்ப் பொருளை யள்ளிப்
படித்தவர் விழுங்குதல் போல்[21]

என்றும்,

பெரியோரின் உள்ளம் எங்கும்
பெருகல்போல் பெருகச் செய்தான்[22]

என்றும் கூறும் உவமைகள் புரட்சிக் கவிஞரின் கவித் திறனுக்குச் சான்று பகர்கின்றன.

கீழ்வரும் பகுதியில் தென்னாடு பெற்ற செல்வத் தென்றலின் இயக்கத்தை உணர்த்துகின்றார். அத்தென்றல் நம் உடலும் தடவப் பெறுவது போன்ற உணர்ச்சியால் பூரிக்கின்றோம். அன்னையின் அன்பினைக் கண்ணில் காணாமல் அவளின் செயலில் காண்பதுபோல், உருவம் காணப்பெறாத தென்றலின் ஒவ்வொரு சின்னநல் அசை விலும் நம்மைச் சிலிர்த்திடச் செய்யும் செயல்களைக் கண்டு மகிழ் கின்றோம்.

நள்ளிரவின் அமைதியிலே மணிவிளக்கும்
நடுங்காமல் சன்னலுக்குள் புகுந்த தென்றல்
மெல்ல உடல் குளிரும்வகை வீசிநிற்கும்
வீணைஇல்லை காதினிலே இனிமை சேர்க்கும்

என்று கூறுகின்றார்.

சட்டைக்குள் அடங்காதாடிக்
களித்திடும் தனது செல்வச்
சிட்டுக்கள்

என்னும் பாடற் பகுதியில் 'குறு குறு' வென்று கொஞ்சு நடை பயிலும் சிறார்களின் நடை காட்டப் பெறுகின்றது. 'சிட்டுக்கள்' என்னும் சொற்படத்தில் சிறார்களையும் காண்கின்றோம்.

அடிக்கு அடி உவமை; அத்தனையும் புதுமை!
தொட்டி நீலத்தில் சுண்ணம்பு கலந்த
கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது

என விடியலை உவமையால் விளக்கும்போது வியப்பன்றோ விரிகிறது.

---

21. பக். 23. 22. பக். 29.

ஒக்கவே வாழ்க!

குடும்ப விளக்கான தங்கமும் அவள் குழந்தைகளும் கடற்கரையில் உலாவச் செல்லுகின்றனர்; அவர்களை வாழ்த்தக் கவிஞர் எண்ணுகின்றார். கடலின் ஓசையில்

ஒக்கவே வாழ்க மக்காள்

என்ற வாழ்த்தை அவள் கேட்டாள் என்றமைத்துத் தன் குறிப்பினை வெளிப்படுத்துகின்றார் கவிஞர்.

பாநயம்

'குடும்ப விளக்கு' அகவல் விருத்தம், வெண்பா, கலித்துறை, சிந்து போன்ற பாவினங்களின் கலப்பின் தொகுப்பாக அமைந்துள்ளது பாடல்கள் பலவும் உணர்ச்சிநயமும் ஒலிநயமும் பெற்று எளிய சந்தமும் ஓசைநயமும் சிறக்க அமைந்துள்ளன. கவிஞரின் உளபப்ண்பிற்கும், கருத்துப் பின்னணிக்கும் ஏற்ப தூய தமிழ் சொல்லாட்சி களாலமைந்த நடை பயிலப்பட்டுள்ளது. நடையில் பொருள் நயமும் ஒலிநயமும் அமையும் பாங்கினை,

'மலர்ந்தன அந்த மங்கையின் விழிகள்'
'அடுக்களை அரங்கினில் நெஞ்சம்
அசைந்திட ஆடலானாள்'

போன்ற பகுதிகளில் காணலாம். கவிஞரின் கவிநயத்தில் அடுக்கடுக்கான சந்தநயம் அமைவதை

நல்லப்பா மகிழும் வண்ணம்
நல்லதப் பாஎன் றோதி,
மெல்லப்பா வைபு ரிந்த
விருந்தினை அருந்த லுற்றான்

போன்ற பல்வேறிடங்களில் சுவைத்துக் கூறலாம்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" எனப் பாடிவந்த பாரதியின் வழி வந்தவர் தமிழியக்கக் கவிஞர் பாவேந்தர் குடும்ப விளக்கின் முதல்நாள் நிகழ்ச்சிகள் தீங்கிலாத் தமிழில் தேனிசை முழங்கத்தொடங்குகின்றது. மொழி உணர்வினைக் கவிஞர் உணர்ச்சியெனும் சாறெடுத்து வழங்கும் கவிஞர்,

இழந்தபழம் புகழ்மீள வேண்டும் நாட்டில்
எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்
வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருகவேண்டும்

என்று வீறுடன் பாடுகின்றார்,

அகநானூறு காட்டும் தலைவி

நுண்மாண் நுழைபுலமும் தீதிலாத் திறமும் கொண்டு அக நானூறுகாட்டும் மனைவிளக்கு மடவாளாகஅமைந்து இல்லறத்தை நல்லறமாக முன்னின்று நடாத்தும் பல்கலைச் செல்வியாம் தங்கத் தின் ஆற்றலைக் கண்ணுற்ற மணவழகனின் தந்தை

அன்றியும் உன்பெண் டாட்டி
அறிவுக்கோர் திருவி ளக்காம்

எனப் போற்றுகின்றார். பிற்பகுதியில் வரும் தலைவியான நகை முத்துவின் தொன்னெறி வழுவாத பண்பும் திறமும் மாண்பும் மணமும்,

அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பும நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்

எனும் அகநானூறு காட்டும் தலைவியை நினைவுப் படுத்துவதோடு இணையற்ற இல்லறத்தின் தலைவியர்க்கு இலக்கணமாகவும் அமை கின்றன.

ஆண்டநாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப்
பாண்டிய மன்னன் மீண்டது போல
உடுத்திய உடையும் எடுத்த மார்பும்
படைத்த கணவனைப் பார்த்துக் கிடந்தாள்

என உவமை காட்டும்போது மீண்டும் பழங்காலப் பெருமை உலா வருகின்றகளிப்பு உள்ளத்தில்.

சொற்பொருள் விளக்கம் [உடலுறுப்புகள்]. " அடி—பாதம். "

அடி :— 'அட்' என்னும் குறைச்சொல்லும்கருவிப்பொருள்தரும் இகரமும் ஒரு சொற்புணர்ச்சியாய் ஒற்றிரட்டாமல் இணைந்து பெயர்ப்பொருட்டாய் நிற்கும் முதனிலைச் சொல்லாகும். இஃது உரியடி மூன்றனுள் குறிப்பின்பாற்படும்.

உடம்பின் முதல் அல்லது அடிப்பகுதியாய் நிற்றல் நிலமாகிய இடத்தினை அடைந்து நிற்றல் ஒன்றன் முன் ஒன்றாக அடுக்கி இயங்குதல் முதலியவை பொருட்க ரணமாகும்.

பாதம் = 'பத் + அம்' என்னும் இரண்டு குறைச் சொற்கள் இணைந்து உருப்பெற்று ஒரு பொருள் குறித்து உடைமைப்பொருள் தர முதல் நீண்டு நிற்கும் சொல்

அம் = இடம். பத் = பதிதல்

குறிப்பு: இடத்திற் பதிதல் என்பது இதன் பொருள் இடத்திற் பதிதலாகிய காரணத்தை உடையது பாதம்.

கொள்—கேள்—இடு—ஈடு. கெடு—கேடு என முதல் நீண்டு உடைமைப் பொருள்படப் பெயராய் நிற்றல் கண்டுகொள்க.

கம்பராமாயணம்-சமயச் சார்பற்ற காவியம்

ம. மதியழகன் எம்.ஏ.எம்.பில்
பேரகராதித் துறை, தமிழ் பல்கலைக் கழகம்

சமயத் தாக்கம் சங்கஇலக்கியங்களில் அதிகம் காணப்படவில்லை. சிலப்பதிகாரம் எல்லாச் சமயங்களும், சமயக் கடவுள்களும் சமமாக மதிக்கப் பெற்ற காப்பியமாகத் திகழ்கிறது. சமயக்கொள்கையை வலியுறுத்தும் நோக்கில் முதலில் எழுந்தது மணிமேகலைக் காப்பியமே. அதையடுத்து ஆழ்வார் நாயன்மார்களால் சமயக் காழ்ப்பும் பூசல்களும் ஏற்பட்டு அகச்சமய புறச் சமய வேறுபாடுகள் தோன்றின. சீவக சிந்தமணி சமண சமயக் கருத்துக்களைத் தரணிக்குப் பரப்பும் கொள்கையைக் கொண்டிருந்தது.

பௌத்தத்திற்கு ஒரு மணிமேகலை போல், சமணத்திற்கொரு சீவக சிந்தாமணிபோல் சைவத்திற்குப் பெரிய புராணம் போல் வைணவத்திற்குக் கம்பராமாயணம் என்னும் கருத்து எழுந்தது. முதல் மூன்றும் மறுக்கமுடியாத கருத்துக்களாக அமைய, 'வைணவத்திற்குக் கம்பராமாயணம்' என்னும் கருத்தே ஆய்வுக்குரிய ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

பௌத்த சமயத்திற்கு புத்தன் தலைவனாகவும், சமண சமயத்திற்கு மகாவீரரும், சைவத்திற்குச் சிவனும், வைணவத்திற்கு திருமாலும் தலைவர்களாக விளங்கி வருகின்றனர். அந்தந்தச்சமயத் தலைவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டிலங்கும் இலக்கியங்கள் அல்லது அச்சமயக் கொள்கைகளை எடுத்தியம்பும் இலக்கியங்கள் அவ்வச் சமயச் சார்புடையவர்களாகக் கருதப் படுகின்றன.

கம்பராமயணத்திற்குப் பாட்டுடைத்தலைவன் யார்? அவன் எச்சமயத்திற்குத் தலைவன்? என்ற வினாக்களை ஆய்ந்து விடை கண்டால், கம்பராமாயணம் எச்சமயம் சார்ந்தது? என்பது தெள்ளிதின் புலப்படும்.

கம்பராமாயணக் காவியத்தலைவன் இராமன், அவன் திருமாலின் அவதாரங்களுள் ஒன்று எனக் கூறுவர். ஆனால் கம்பர் இராமனைத் திருமாலின் அவதாரமாகக் காட்டவில்லை. மூவர்க்கும் முதல்வனாகிய அறத்தின் மூர்த்தியாகக் காண்கின்றார். இராமனுக்கு முடிசூட்டக்

கருதி, தன் எண்ணத்தை அமைச்சர் முதலியோரிடத்தில் தெரிவிக்கின்றான் தசரதன். அப்போது வசிட்டர் இராமனைப் பற்றிக் கூறும் பொழுது

"புறத்து நாமொரு பொருள் இனிப் புகல்கின்றது எவனோ
அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான் என்பதல்லால்
பிறத்து யாவையுங் காத்துஅவை பின் உறத் துடைக்கும்
திறத்து மூவருந் திருந்திடத் திருத்தும் அத்திறலோன்"[1]

என்கின்றார். "மூவரும் திருந்திடத் திருத்தும்" என்ற விடத்து மூவர் என்பார் படைக்கும் கடவுள் பிரமன், காக்குங் கடவுள் திருமால் அழிக்கும் கடவுள் சிவன் ஆவார்கள். இம்மூவரையுந் திருத்துகின்ற அறத்தின் மூர்த்தி நிச்சயமாகத் திருமாலாக இருக்க முடியாது. ஏனெனில் திருத்தப்படக் கூடியவர்களில் திருமாலும் காணப் படுகின்றார்.

இராமன் தேவர்கட்கு உறுதி கொடுக்கும்போது,

'சூர் அறுத்தவனுஞ் சுடர் நேமியும்
ஊரறுத்த ஒருவனு மோம்பினும்
ஆரறத்தி னொடன்றி நின்றாரவர்
வேரறுப்பென் வெருவன்மின் நீர் என்றான்"[2]

என்று கூறுகின்றான். ஈண்டு சூர் அறுத்த முருகன், சுடர்நேமி திருமால். ஊரறுத்த சிவன் இம்மூவரில் யார் பாதுகாத்தாலும் அற நெறியினின்றும் மாறுபட்டவர்களை அடியோடு அழிப்பேன், என்பது இராமன் உறுதிமொழியாகும். இராமன் திருமாலின் அவதாரம் என்றால் திருமாலையுஞ் சேர்த்துக் கூறியிருப்பானா என்பதைச் சிந்திக்க வேண்டும். கம்பர் இராமனைத் திருமாலின் அவதாரமாகக் கருதியிருப்பாரானால் "சுடர் நேமியை" நீக்கி வேறோர் கடவுளை அவ்விடத்துக் கூறமுடியும். ஆனால் கம்பரின் கருத்து அதுவன்று. மூவர்க்கும் முதல்வறாக இராமனைக் காண்கிறார். அதனாற்றான், சிவனோடு திருமாலையும் சேர்த்து மதிப்பிடுகின்றார்.

இராமன் திருமால் அல்ல ; மூவர்க்கு முதல்வன் என்பதை இராவணனும் உறுதி செய்கின்றான். போர்க்களத்தில் இராமனது ஆற்றலைக் கண்டு வியந்து தன் மனதிற்குள் நினைக்கின்றான்.

'சிவனோ அல்லன் நான்முகனல்லன் திருமாலாம்
அவனோ அல்லன் மெய்வரமெல்லாம் அடுகின்றான்
தவனோ என்னில் செய்து முடிக்குந் தரனல்லன்
இவனோ தானஅவ் வேதமுதற் காரணன் என்றான்"[3]

இராமன் மூவர்க்கு முதல்வனே திருமால் அல்லன் என்பதை உணர இதைவிடத்தெளிவான வெறொருசான்று தேவையில்லை. இவ்வாறு பலவிடங்களில் பல பத்திரங்களின் மூலம் கம்பர் இராமனை மூவர்க்கு முதல்வன் என்றவுணர்விலேயே உணர்த்துகின்றார்.

பாலகாண்டம்	நகரப்படம்-3 திருவவதாரப்படலம் கடிமணப் படலம் 60 68
அயோத்தியா காண்டம்	மந்திரப் படலம் 36 கைகேசி சூழ்வினைப் படலம் 66 திருவடி சூட்டுப் படலம் 73
ஆரண்யகாண்டம்	அகத்தியப்படலம் 22 சடாயுகாண் படலம் 12 சடாயு உயிர்நீத்த படலம் 98 கவந்தன் படலம்-சவரிபிறப்பு நீங்கு படலம் 64
கிட்கிந்தா காண்டம்	நட்புப்படலம் 19 கலன்காண் படலம் 17 நாடவிட்ட படலம் 21
யுத்தகாண்டம்	கும்பகருணன் வதைப் படலம் 150 இராவணன் வதைப் படலம் 134
சுந்தரகாண்டம்	பிணிவீட்டு படலம் 80 உருக்காட்டு படலம் 71

சிலவிடங்களில் இராமனைத் திருமாலாகக் கம்பர் வருணித்திருப்பதைக் கொண்டு அவரை வைணவ சமயத்தினர் என்றும் அக்காவியம் வைணவச் சார்புடையது என்றும்வாதிடுவர் இராமனைத் திருமாலாக வருணித்திருப்பது உண்மையே.

"... அஞ்சனக்
கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதியை
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை"

"கருங்கடல் பள்ளியில் கலவீ நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசலும் வேண்டுமோ?'

'சங்கொடு சக்கரம் தரித்த செய்கை அச்
சிங்க ஏறு"[4]

போன்ற பாடல்களில் இராமனைத் திருமாலாக எண்ணி வருணித்திருக்கின்றார். கம்பர் மூவர்க்கும் முதல்வனாகிய பரம்பொருள் தத்துவத்தைஉணர்த்த எண்ணினார். அதை உணர்த்தஇராமனைப் படைத்தார் அப்பரம்பொருளுக்கு ஓர் உருவங் கொடுக்க யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சிந்தித்தார். சிவன்,நான்முகன்,திருமால், மூவரும் அவர் கண் முன்னே தோன்றினர். இம் மூவருள் சிவனும் நான்முகனும் வெளித் தோற்றத்தில் அழகுடையவர்களாகத் தோன்றவில்லை. மேகநிற வண்ணனும் பெண்கள் போற்றும் அழகுடையவனுமாகிய திருமாலின் அழகை (தோற்றத்தை) தன்னுடைய பாட்டுடைத் தலைவனுக்கு ஏற்ற எண்ணினர். முருகனை அல்லது திருமாலை ஆணின் அழகிற்கு எடுத்துக் கூறுவர். இளங்கோ கோவலனை ''கண்டேத்துஞ் செவ்வேள்" என்று கூறுகின்றார். கம்பர் மூவரில் திருமாலின் அழகுத் தோற்றத்தை இராமனுக்கு ஏற்றிக் கூறுகின்றார். அவ்வெண்ணத்தின் வெளிப்பாடே இப்பாடல்கள். இதனைக் கம்பர் வீடணன் வாயால்,

> *''மூவர்க்கும் தலைவர் ஆன மூர்த்தியர் அறத்தை முற்றும்*
> *காவற்குப் புகுந்து நின்றார் காகுத்த வேடம் காட்டி''*[5]

என்ற திருமாலின் வேடம்புனைந்தவன் இராமன் என்னும் உண்மையைக் கூறுகின்றார்.

இப்பாடல்களைக் கொண்டு இராமனைத் திருமாலாக எண்ணி விடுவார்கள். என்ற அச்சத்தின் காரணமாகத்தான் (எங்கே தன்னுடைய பரம்பொருள் தத்துவத்தை மறந்து விடுவார்களோ என்ற ஐயத்தின் காரணமாக) கம்பர், பல்வகைப் பாத்திரங்களின் மூலம் மூவர்க்கும் முதல்வன் இராமன் என்பதை இடையிடையே சுட்டிச் செல்கின்றார். அஃதன்றி பரசுராமனையும் இராமனையும் சந்திக்க வைத்து அப்பரசுராமன் தான் உண்மையாகத் திருமாலின் அவதாரம் என்பதை நிலைநாட்டுகின்றார். பரசுராமப் படலம் கம்பராமாயணகதைக்குத் தேவையற்ற ஒன்று.எனினும் மூவர்க்கு முதல்வனாகிய இராமன் முன், மூவரில் ஒருவனாகிய திருமாலின் அவதாரம் (பரசுராமன்) தோற்பதைத் தெரிவிக்கவும் இராமனைத் திருமாலினின்றும் வேறுபட்டவன் என்பதை உணர்த்தவுமே இப்படலத்தைக் கையாண்டார் எனத் தோன்றுகின்றது.

இளங்கோவடிகள் தாம் படைத்த சிலப்பதிகாரத்தில் சமணராகிய கவுந்தியடிகளை அறிமுகப்படுத்தும்போது

> *''காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு*
> *நாம மல்லது நவிலாது என்னா''*

என்று கூறுகின்ற தீவிர சமணப்பற்றுடையவராகக் காட்டுகின்றார். ஆனால் அக்கவுந்தியடிகளின் மூலமாகவே கண்ணகியை,

*''இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"*

என்று கூறவைத்துப் பத்தினி வழிபாட்டை பாங்குற மொழிகின்றார் இளங்கோவடிகளின் நோக்கம் ''உரைசால் பத்தினிக்குயர்ந்தோர் ஏத்தல்" என்பதே. அதனை உணர்த்த சமணச் சார்புடைய கவுந்தியடியைப் படைத்து, அவர் மூலமாகவே பத்தினி வழிபாட்டிற்கு அடிக்கல் நாட்டுகின்றார். அவ்வாறே கம்பரும் திருமாலுக்குரிய உருவை மட்டும் இராமனுக்கு ஏற்றி, மூவர்க்கும் முதல்வனாகிய பரம் பொருள் செய்கையை நிலைநாட்டியுள்ளார்.

மேற்கண்டவற்றால், எச்சமயக் கடவுளரையும் தலைவராகக் கொள்ளாது மூவர்க்கும் முதல்வனாகிய பரம்பொருள் தத்துவத்தை, திருமாலின் உருவமாக இராமனைப் படைத்து, சமயப் பொதுமை யுடைய காப்பியமாகக் கம்பர் தன் காப்பியத்தைப் படைத்துள்ளார் என்பது தெள்ளிதின் புலப்படுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. கம்பராமாயணம் – கம்பன் கழகம் – சென்னை அயோத்தியா. மந்திரப் படலம் 36

5. ஆரண்ய காண்டம்-அகத்தியப் படலம் 22

3. யுத்தகாண்டம்–இராவணன் வதைப் படலம் 134

4. பாலகாண்டம்–திருவவதாரப் படலம் 103
மிதிலைக் காட்சிப் படலம் 38
கார்முகப் படலம் 5

5. யுத்தகாண்டம்-கும்பகருணன் வதைப்படலம்–150

268

பாடவேறுபாடு-ஓர் ஆய்வு

த. அழகப்பராசு, எம். ஏ
செ. இரா, பிரசன்னா, எம். ஏ
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பாடவேறுபாட்டினை ஆய்வது மூலபாட ஆய்வியலின் (Textuel criticism) ஒரு கூறாகக் கருதப்படுகின்றது. பாடவேறுபாடு, பதிப்பாசிரியர்க்குத் தொல்லை தருவனவற்றுள் முதன்மையானது. இப்பாட வேறுபாடு தோன்றுவதற்குப் பல காரணங்கள் உண்டு

இலக்கியங்கள் வாய்மொழிவழியே பெரிதும் கற்பிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

'சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்"

என்பது பழமொழி. இது வாய்மொழிவழி கல்வி பயிலப்பட்ட நிலையை உணர்த்துகிறது. எழுதும் பொருளும், எழுதப்படும் பொருளும் கிடைக்காதபோது, அல்லது அவற்றைப் பெறுவதில் இடர்ப்பாடுகள் இருந்தபோது வாய்மொழி வழியே கல்வி கற்பிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

மேற்கல்வி நிலைகளில்-தனிக்கல்வி முறைகளில் எழுதும் முறை மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றோம். அதற்கு முன்னர் மணற்பரப்பிலும் கரும்பலகைகலிலும் எழுதிவந்த மாணவர்கள் இந்நிலையில்தான் சுவடியில் எழுதத் தொடங்குகின்றனர். பெரும் பாலான மொழிகளில் தோன்றிய தொடக்க கால இலக்கியங்கள் வாய்மொழி வழியே பெரிதும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன'. (13 ப. 80) தமிழ் இலக்கிய வரலாற்றில் சிக்கல்கள் சிலவற்றை உருவாக்கிய இறையனார் அகப்பொருள் உரை வாய்மொழிவழி-தலைமுறைத் தலைமுறையாகச் சொல்லப்பட்டு வந்ததாகக் கருதப் படுகின்றது.

''மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்
கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர்
தேனூர்க் கிழாருக்கு உரைத்தார்; அவர்
பாடியங் கொற்றனார்க்கு உரைத்தார்"

பாமரர்களால் படைக்கப்பட்ட நாட்டுப் பாடல்கள் பெரும் பான்மையும் வாய்மொழிவழியே வளர்ந்து வந்திருக்கின்றன,

கிராமத்தில் நாடகக் குழுக்களில் தெருக்கூத்து அமைப்புகளில் உள்ள நடிகர்கள் பாடகர் ஆகியோருள் பலர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே இருப்பதை இன்றும் காணலாம். வடமொழியை எழுதவும் படிக்கவும் தெரியாதவர்கள் வடமொழிச் சுலோகங்களைச் சொல்லி அர்ச்சனை செய்வதைக் காண்கிறோம்.

எனவே வாய்மொழி வழி சொல்லப்பட்டு வந்த நூல்கள் பயிற்றுவிப்போருக்கும், பயில்வோர்க்குமிடையே காணப்படும் ஒலியமைப்பு மாறுபாடுகள் உச்சரிப்புத் தன்மை இவற்றைக் கொண்டு தம்முள் பற்பல பாடவேறுபாடுகளைத்தாங்கி நிற்கின்றன. இது பாடவேறுபாட்டின் முதலாம் வகை ; முதன்மையான வகை.

துணைமை வகையாக, சுவடிகள் படியெடுக்கப்பட்டபோது நிகழ்ந்த பாடவேறுபாட்டு மாறுபாடுகளைக் குறிக்கலாம். சுவடிகள் மிகக் குறைந்த வாழ்நாள் உடையவை. எனவே அவை அழிவு கருதியும், தேவைக்காகவும் படியெடுக்கப்பட்டன. சிலபோழ்து மாணவர்களைத் தனக்கென ஒரு படி எழுதித் தருமாறும் ஆசிரியர்கள் பணிப்பர். செல்வந்தர்களும் அரசர்களும் பெருமைக்காக நூல்களை எழுதிச் சேர்த்து வைத்திருந்தனர். சமீன்தார்களும் நூல்களைச் சேர்த்து வைத்தனர். ஊற்றுமலை சமீன்தார் போன்ற செல்வந்தர் தம் வீட்டுப் புத்தகசாலைகளுக்காகவும் ; தருமபுரம் திருவாடுதுறை போன்ற மடங்களின் மடாதிபதிகள் தங்கள் மடந்துச் சரஸ்வதி பண்டாரத்திற்காகவும் பிறரைப் படியெடுத்துத் தரச்சொல்லி வாங்கிவைத்து வந்தனர்.

சான்று :

> ''928—ம் வருஷம் ...
> திருநெல்வேலி, தம்பாப் பிள்ளையன் அவர்கள்
> ஏடுபார்த்து எழுதின—
> ஸ்ரீவைகுண்டம் சிவசங்கரம் பிள்ளையவர்கள்
> எழுதின இராமாயணம் — திருவேங்கடம்
> எழுதுவித்து எழுதின ஏட்டின்படிக்கு
> முதற்புத்தகம் பிழைபார்த்து முடிந்தது'' . (5, 0, 3)

மன்னர்கள் சுவடிகளைச் சேர்த்தனர். தொகை நூல் வரலாறுகள் இதற்குச்சான்றுபகர்வன. இராசராச சோழன் தொகுத்ததாகக் கூறப்படும் செய்தியும், பிற்காலச்சுவடி நூலகத்தை மன்னர் தொகுத்ததும் இவற்றை விளக்கலாம்.

சுவடிகளினின்றும் பெயர்த்து எழுதுகின்ற வேலையை மாணவர்களோ, கூலிகொடுத்து அதற்கென அமர்த்தப்பட்டவர்களோ செய்து

வந்தனர். அதனாலும் பாட வேறுபாடுகள் ஏற்படுகின்றன. ஓலையில் எழுதும் நிலை பண்டைக் காலத்தில் மூன்று நிலைகளில் நிகழ்ந்துள்ளது. படியெடுப்போர் ஓலையைப் பார்த்து எழுதுவது. ஒருவர் சொல்ல மற்றவர் எழுதுவது ; சொற்பொழிவு, கற்பித்தல் போன்றவற்றைக் கேட்டு எழுதுவது போன்றன அம்மூன்று நிலைகள். ஓலையைப் பார்த்து எழுதுவதை ஊதிய நோக்கில் படியெடுப்போர் மட்டுமே மேற்கொண்டிருந்தனர். இப்படிப் பார்த்து எழுதுவதில் கவனமின்மை, போதிய அறிவின்மை, ஊதியநோக்கில் செய்வதால் துரித ஓட்டம் இவற்றால் பிழைகள் நேருகின்றன.

பார்த்து எழுதுகின்றபிரதிகளின் கையெழுத்துத்தெளிவின்மையும், அவ்வேடுகளின் சிதைவும் பாடவேறுபாட்டிற்குக் காரணமாகின்றன. சிதைந்த இடத்தில் தாமே சொற்களை ஊகித்து, படியில் எழுதுவது மற்றொரு வகையில் இதற்குக் காரணமாக அமைகின்றது. அவை அவரவர் மனப்போக்கிற்கும் அறிவாற்றலுக்கும் ஏற்ப நிரப்பப்படுவதால் பிழைகள் ஏற்பட்டு பாட வேறுபாடுகளை உண்டாக்குகின்றன.

பிறர் சொல்ல எழுதுவதில் ஒருவருக்கு ஒருவர் சொல்லும்போது பிழைகள் அதிகமிராது ; ஆனால் இங்கு ஒருவர் சொல்ல ஒருவர் மட்டுமே எழுதும் நிலை குறைவு ; ஏனெனில் சொல்ல எழுதுவதின் நோக்கமே ஒருவர் சொல்லும்போது பலர் எழுதவேண்டும் என்பதுதான். இதில் ஆசிரியர்கள் சொல்ல மாணவர் எழுதுவது மாணவருள் முதன்மையானவர் சொல்ல மற்ற மாணவர் எழுதுவது என்ற இரண்டு முறை இருந்துள்ளது. முன்னதில் மாணவர் செய்யும் பிழையும், பின்னதில் சொல்பவர் எழுதுபவர் இருவர் செய்யும் பிழையும் இடம்பெற்றுச் சொல்வேறுபாடுகளையும் தருகின்றன. இவ்வாறான பிழைகள் பெரும்பான்மையும் ஒலியமைப்பினால் ஏற்படுகின்றன.

சொற்களைப் பிரித்தும், இணைத்தும் எழுதும்போது அவற்றைத் தவறாக எழுதிவிட வாய்ப்பிருக்கின்றது. படியெடுப்போர் வேற்றுமொழிச்சொற்களைத் தமிழ்ப்படுத்துவதாக எண்ணித் தவறாக எழுதுதலும், எண்களையும் குறியீடுகளையும் எழுத்தெனக்கொண்டு எழுதிவிடுதலும் பாடவேறுபாட்டிற்குக் காரணமாக அமைகின்றன. பாடவேறுபாடுகளால் சிக்கித் தவித்து மீள வழியின்றித் திணறிய நாட்கள் பல தமது வாழ்நாளில் உண்டு என்கிறார். அழிவு கருதி அவற்றைப் படியெடுப்பதே பாடவேறுபாட்டிற்குக் காரணம் என்கிறார் டாக்டர் உ. வே சா (4, 11, 23)

> "பழந்தமிழ் நூல்களில் பாடவேறுபாடில்லாத ஒரு நூலை நாம் காணக் கூடவில்லை. பல நூற்றாண்டுகளாகச் சுவடிகளில் எழுதிக் கற்றுப் போற்றி வந்தமையினால்தான் நூல்களில் பாட வேறுபாடுகளும் மிகுந்து வரலாயின". (3. U. 9)

என்று காட்டுவர் மு. சண்முகம் பிள்ளையவர்கள் மேலும் பண்டைப் புலவரை அடுத்துக் கற்று வருகின்ற மாணவர் தமது ஆசிரியருடனே இருந்து வருவதால், ஆசிரியர் புதிதாகச் சொல்லும் பாக்களையும், உரைகளையும் கேட்டு உடனுக்குடன் எழுதி வருவதையும் மாணவர் சிலர் மேற்கொண்டிருந்ததாகக் குறிப்பர்.

பாடவேறுபாட்டிற்கு வரிவடிவத்தில் ஏற்பட்ட சில மாறுபாடு களும் காரணமாகலாம். ர-ற, ல-ள-ழ, ண-ந-ன போன்ற ஒலிப்புத் தன்மையில் மிகுந்த மாறுபாடில்லாத -ஒலி ஒப்புமையுடைய ஒலி களும், ஒற்றின்றி எழுதுதல், அடிவயிறின்றி எழுதுதல், பல்வேறு குறியீடுகள் இன்றி எழுதுதல், பிறமொழியின் செல்வாக்குப் போன்றன இவ்வகையில் காரணமாக அமையமுடியும்.

கால இடையீடு

நூல் உருவான காலத்திற்கும் அது அச்சுருவம் பெற்ற காலத்திற்கும் இடையில் ஏற்படுகின்ற கால நீட்சியும் இதற்குக் காரணமாக அமைகின்றது. ஓலையில் இருக்கின்ற பழம் நூல்கள் பெரும்பாலும் காலத்தால் முந்தியவை. அந்த நூல் தோன்றி மக்களிடை பரவி வழங்கிய பின்னர்க் காலங்கடந்துதான் அவற்றின் உரைகள் தோன்றியிருக்கின்றன. அது அச்சாக்கம் பெற்ற காலத்திற்கும் உரைபெற்ற காலத்திற்கும் இடையிலும் கால நீட்சி மிகுந்திருந்தன.

சீவகசிந்தாமணி கி. பி 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அதற்கு நச்சினார்க்கினியார் உரை வகுத்த காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. ஆனால் அது பதிப்புருப் பெற்றது கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் தான்.

எனவே நூல்தோன்றிய காலத்திற்கும், அதற்கு உரை எழுந்த காலத்திற்கும், அது அச்சான காலத்திற்கும் மொழியில் எழுத்து வழக்கிலும், பேச்சு வழக்கிலும் இடம்பெற்ற மாற்றங்கள் பலவுண்டு. இவற்றுடன் அவ்வப்போது படியெடுத்தவர்கள் செய்த மாற்றங்களும் இணையும்போது, பதிப்பாசிரியர் சிக்கலில் மூழ்கி மீளுவதற்கு வழி யின்றித் திகைப்பதில் வியப்பென்ன இருக்கமுடியும்

''கரலிகிதங்களால் ஏட்டுப்பிரதிகளில் காலந்தோறும் மிக்க அக்ஷர வழுவுஞ் சொற்சிதைவும் வாக்கியப் பிறழ்வும் இத்துணையவென்று சொல்லற்பாலதன்று. இதிகாச சிரோ ரத்தினமாகிய இராமாயணத்தை எழுதி அரங்கேற்றிய கம்பர் சோழன்மேற்கொண்டவெறுப்பினால் அவனூரைவிட்டு இருபது முப்பது வருஷம் சேரனிடம் போயிருந்து பின்பு சோழனைக் காண அபேச்சையுடையாசாய்த் திரும்பி வரும் வழியில் ஒரு மடத்திலே சில வித்வான்கள் சேர்ந்து இராமாயணப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தனர். இஃது தனது இராமாயணப் பிரசங்கமென்று தெரியாதிருந்தும் கற்றாரைக் கற்றார் காமுறுதல் இயல்பாதலின் கம்பர் யாது பிரசங்கமாயினு மாகுக கல்விப் பிரசங்கங்கண்டு கம்பன் புறம்பொழுகலாமாவென்று. தன்னை இன்னனென்றன்னோர்க்குத் தெரிவியாது யாரோ வழிப்பிரயாணக்காரன் போல உள்ளே சிலநேரம் போயிருந்து ஒன்றையொன்று பார்த்தெழுத எழுதப் பிரதிகள் தோறும் புக்க வழுக்களுந்திரிவுகளும் அதிகப்பட்டிருந் தமையால் அஃது தனது ராமாயணமென்று மட்டிடாமற் றன் வாக்குஞ் செய்யுட்களும் இடைக்கிடை யாரோ செருகு கவிகள் சேர்த்திருப்பதாகச் சொன்னாராம். ஒருவர் காலத்திலே இவ்வளவாயின் ஆயிரத்தைந்நூறு வருஷத்திரிவு எப்படியிருக்கலாமென்பதை அநுமானித்துக் கொள்க''
(7. ப. 25)

என்கிறார் தாமோதரம் பிள்ளைவர்கள்.

ஒரு பகுதியில் வழங்குகின்ற ஒரு பிரதிக்கும், அதே பகுதியில் வழங்குகின்ற மற்றைய பிரதிகளுக்கும் வேறுபாடுகள் பிழைகள் இவை காணப்படுகின்றன. ஒரு பகுதியில் வழங்கி வருகின்ற பல சுவடிகள் ஒன்றிரண்டு மூலப் பிரதிகளினின்றும் வளர்ச்சி பெற்றனவாகவே அமைகின்றன. ஓரிடத்தில் தோன்றிய/வழங்குகின்ற ஒரு நூலுக்கும் பிறிதொரு இடத்தில் வழங்குகின்ற அதே நூலுக்கும்

வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. இவை பல்வேறு மூலச் சுவடிகளினின்றும் ஆக்கப் பெற்றமையே இதற்குக் காரணமாகும் (7, U. 26)

அந்தச் சுவடிகளைப் படியொடுத்தோரால் ஏற்பட்ட வேறுபாடுகள், இடைச் செருகல்கள், விடுகைகள் போன்றவை மட்டுமல்லாது, அந்தக் குறிப்பிட்ட பகுதியின் வழக்குகளும், வட்டார மொழிகளும் ஏற்பட்டுப் பதிப்பிப்பார்க்குத் தொல்லையைத் தருகின்றன.

பாடமும் பாடவேறுபாடுகளும்

பல பாடங்கள் கொண்ட சுவடிகள் கிடைக்கும்போது சரியான பாடத்தை முடிவு செய்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. மூல நூலினைத் திருத்தம்செய்யாது ஏட்டில் இருக்கின்றவாறே பதிப்பது ஒரு முறை ஏட்டில் கண்ட பாடம் சரியான பாடமாகப் பதிப்பாசிரியர் கருதாதபோது அதற்கெனச் சரியான பாடத்தைப் பிற நூல், நூல் பயிற்சி போன்றவற்றின் துணைகொண்டு செம்மையாக்கிப் பதிப்பது மற்றொரு முறை. இதில் முதல் முறையினைக் கொண்டோர் பாட வேறுபாடுகளைப் பெரும்பான்மையும் குறிப்பதில்லை. இரண்டாவது முறையில் பதிப்பிப்போர் கொண்ட பாடத்தைப் பதிப்பித்து பிற வற்றை அல்லது பிறவற்றிலும் தாம் தெரிந்தெடுத்தவற்றை அடிக் குறிப்பில் தருவர்.

ஆசிரியர் கொண்ட பாடம் இதுவாக இருக்கும் என்று நூலின் நோக்கையும் போக்கையும் உணர்ந்து, நூலாசிரியனின் படைப்புத் தன்மைகளை நுகர்ந்து, அதற்கேற்ற பாடத்தைச் சரியான பாட மாகக் கொள்ளுதல் முறை என்று ஆய்வாளர் கருதுகின்றனர். சில வேளைகளில் பதிப்பாசிரியன், அவனது விருப்பு வெறுப்பிற்கேற்பப் பாடங்களைத் திருத்திப் பதிப்பித்ததையும் பதிப்பு வரலாறுணர்ந் தோர் நன்கறிவர்.

பொருட்டொகுதி, போருட்டொகுதி, பேரர்உட்தொகுதி, பேர் அருட்டொகுதி என்று ஒரு சொல்லின் பல வழக்குகள் கிடைத்த போது தனது சிற்றறிவுக்குச் சரியென்று பட்டதையே பாடமாகக் கொண்டதாக (பொருட்டொகுதி) தாமோதரனார் குறிப்பர்[9].

மூலநூலில் திருத்தம், மாற்றம் செய்யக்கூடாது என்ற கருத்து ஆரம்பகால மத இலக்கியப் பதிப்புகளுக்காக எழுந்த ஒன்று. மத நூல்கள் இறைவனால் படைக்கப்பட்டதாக எண்ணினர். எனவே அதில் திருத்தம் செய்வது மதநூல்களின் கருத்துகளை மாற்றி இறைவிதிகளுக்கு வேறுபட்டுவிடக் கூடும், மாசு கற்பிக்கும் என்று

நம்பினர். அதை அடியொற்றியே தொடக்ககால இலக்கண, இலக்கியப் பதிப்பாளர்களும் மூலநூல்களில் திருத்தம் செய்வதைத் தவிர்த்தனர்.

பிழையான பாடம் என்று உரையாசிரியர் அல்லது பதிப்பாசிரியர் உறுதியாக உணர்ந்தபோது, மூல ஆசிரியன் கருத்துணர்ந்து அதற்கேற்ப திருத்தமும் செய்யலாம் என்று பிற்காலத்தார் கருதினர். அப்போது பதிப்பாளன் மூல நூலாசிரியனின் நடை, படைப்புத் தன்மை இவற்றை உணர்ந்து படைப்போடு ஒன்றிச் செயல்பட வேண்டும். சேக்ஸ்பியரின் இன்றைய பதிப்புகளில் காணப்படும் தொடர்கள் அனைத்தும் ஆசிரியரின் படைப்பில் காணப்பட்டவை எனறு கூறமுடியாது. சிலஅடிகள் வெட்டப்பட்டும், சில அடிகள் செதுக்கப்பட்டும், இன்னும் சில அடிகள் முற்றிலும் உருமாறியும் உள்ளன. (6, ப. 149) இந்நிலை சில தமிழ்ச் சுவடிப் பதிப்புகளிலும் நிகழ்ந்துள்ளது.

திவாகரநிகண்டினைப் பதிப்பித்த விசாகப் பெருமாள் ஐயர் முதன்முதலில் நிகண்டுப் பகுதியுடன்தான் சிலவற்றைச் சேர்த்துப் பதிப்பித்தால் நன்றாக இருக்கும் என்று கருதினார். அவ்வாறு தானாகச் சேர்த்த பகுதிகளை உடுக்குறியிட்டு நிகண்டுப் பகுதியினின்றும் பிரித்துக் காட்டினார். ஆனால் அதன் இரண்டாம் பதிப்பு உடுக்குறி இன்றிப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில் மூல நூலின் பகுதி எது ? சேர்க்கப்பட்ட பகுதி எது என்று அறியமுடியவில்லை. பின்வருவோர் அதையும் மூலப்பாடமாக எண்ணிவிட இச்செருகல் வழிவகை செய்கின்றது.

பதிப்பாளர்கள் சிலர்பாடல்களைப் பதிப்பிக்கும்போது இச்சொல் இந்த விடுத்து இருந்தால் நன்றாக இருக்கும் என்று கருதி சிலவற்றை இணைத்து விடுகின்றனர். கால் சுளுக்கெடுத்து நிமிரும்படி செய்கின்ற டாக்டரைப் போல கவிதைச் சுளுக்கை எடுக்கிறார் என்று டி.கே.சி. பற்றி பாஸ்கரத் தொண்டைமான் குறித்துள்ளார். (6, ப. 150) இவ்வாறு சில பதிப்பாளர்கள் புதிய பாடங்களைப் படைத்தும், சிலவற்றை நீக்கியும், சிலவற்றை நிலைக்கச் செய்தும் பதிப்பித்துள்ளனர்.

பதிப்பிப்பாளர்கள் சிலர் பாடவேறுபாடுகள் பல கிடைக்கின்றபோது அவற்றுள் சரியானதென்று தான் எதைக் கருதுகின்றாரோ அதை மட்டுமே தேர்ந்து பதிப்பித்து விடுகின்றனர். அவர்கள் மற்ற பாடங்களைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை; கவலைப்படுவதில்லை. இது அத்துணைச் சிறந்த முறையன்று. ஏனெனில் வேறு பாடங்கள்

கிடைக்கின்றபோது பின்னர் வருவோரால் எது சரியானது என்று ஆய்ந்து தெளிதற்கு அதில் வாய்ப்பில்லாது போய்விடுகிறது. சில பதிப்பாளர் தான் கொண்ட பாடம் தவிர்த்து மற்றவற்றை அடிக் குறிப்பில் குறித்துச் செல்கின்றனர்.

ஆறுமுக நாவலர் நாம் அச்சிட்ட நூல்களில் பாடவேறுபாடு களைக் குறிப்பிடவில்லை. தம் அறிவிற்கு எது பொருத்தமாகப் பட்டதோ அதையே பாடமாகக் கொண்டிருக்கிறார். பதிப்பாளர்கள் சிறந்த பாடமாகக் கருதியனவற்றையே பாடமாகக் கொண்டனர். சரியானபாடம் அவர்களால் முடிவு செய்யப்படவில்லை, முடிவு செய்யவும் முடியாது.

சி. வை. தாமோதரம்பிள்ளை தனது கலித்தொகைப் பதிப்பில் செய்த சில மாற்றங்களைக் குறிப்பிடுகின்றார். இடக்கர்பெயரை யும், குஃறொடர்ந்த அன்மொழியையும் மாற்றி அமைத்ததாகப் பதிப்புரையில் கூறியுள்ளார். முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுதல் யாவர்க்கும் கடன் என்பதால் நூலாசிரியனின் கருத்தை மாற்றுவதில்லை என்கிறார். ஆனால் கலித்தொகை கல்விக் கூடங்களில் பாடமாகக் கற்பிக்க வேண்டியிருப்பதால் இவ்வகையான பெயர்கள் இடம் பெறுவது சரியில்லை என்று கருதுகின்றார். எனவே அவற்றை மாற்றி அவற்றிற்குப் பதிலாகச் சில சொற்களைச் செருகியுள்ளார். அவை எவை என்பதையும் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

கலித்தொகையில் பதிப்பில் மாற்றம் செய்து அதற்காகத் தன்னை மன்னிக்கும்படி மக்களை வேண்டிக் கொண்டுள்ளார். ஆனால் தனது சூளாமணிப் பதிப்பில்,

> ''ஒரு திருத்தமும் செய்யாது பழம் பிரதிகளின்படி
> ஒப்பிப்பதால் வரும் பயன் யாது ? வீரசோழியத்திற்
> சில இடங்களிற் பிழைபட்டனவற்றை இருந்த வண்ணம்
> ஒப்பித்தேனன்றோ ? யாவர் அவற்றுக்குப் பூர்வ
> சொரூபங் கொடுத்தார் ! தேட முயன்றவராயினும்
> உளரா ? என்பு நொறுங்கிய காலை வெட்டியெறிந்து
> பொய்க்கால் வைத்தாற்போல அவற்றிற்குப் புத்து–
> தாரணங்கள் செய்து சேர்த்திருப்பேனாயின் கற்போர்க்குச்
> சிறிதாவது பயன்படத்தக்கதா யிருக்குமே !" (7, ப. 104)

என்றுரைக்கின்றார்.

பாடவேறுபாட்டு வகைகள்

டாக்டர் உ. வே. சா. அவர்கள் கொண்ட பாடவேறுபாட்டின்

வகைகள் மற்ற பதிப்பாளர்கள் கொண்டுள்ள வேறுபாட்டிற்குள் பெரும்பான்மையும் அடங்குமாதலால் அவ்வகைப்பாடுகள் இங்குச் சுட்டப்படுகின்றன. (5, ப. 155–162)

1. ஓரெழுத்தின் உயிரொலிக்குறி மாறி வருவன.
2. ஒரு சொல்லின் ஓரெழுத்து மட்டும் மாறி வருவன
   (அ) பொருள் வேறுபாடு அற்றவை
   (ஆ) பொருள் வேறுபாடு உடையவை.
3. சொல்மாறி வருவன
   (அ) பொருள் வேறுபாடு அற்றவை
   (ஆ) பொருள் வேறுபாடு உடையவை
4. முற்றிலும் வேறு சொல்லாக வருவன
5. ஒரு சொல்லுக்கு இரண்டு மூன்று பாடவேறுபாடுகள் வருவன.
6. வரிகள் மாறி வருவன
7. சொற்கள் முன்பின்னாக மாறிவருவன
8. இலக்கண வேறுபாடுடையன

என இவற்றை வகைப்படுத்திக் கொள்ளலாம். இவை நூலுக்கும், பிரதிகளுக்கும், காலத்திற்கும், தன்மைக்கும் ஏற்ப தம்முள்மாறு படக்கூடும். அனைத்திற்கும் சான்று தருவது விரியும் என்றஞ்சி சிலவற்றிற்கு மட்டுங் இங்குத் தரப்பட்டுள்ளன.

உயிரொலிக் குறிகள் மாற்றம்

தெவிட்டப் — தெவிட்டிப் (11, அடி 660)
பிறங்கடை — புறங்கடை (2, அடி 30)

முன்னதில் அகர உயிர் இகர உயிராகவும், பின்னதில் இகர உயிர் உகர உயிராகவும் மாற்றம் பெற்றுள்ளன

ஓரெழுத்து ஒலிமாற்றம்

ஒரு சொல்லில் இருக்கின்ற ஓரெழுத்து மாறினும், இடம் மாறினும், விடப்பட்டாலும் பொருள் மாறுபடலாம்.

சொன்னாய் — செந்நாய் (2, அடி 139)
பலருடன் — பலவுடன் (8, அடி 39 உரை)

இந்த ஓரெழுத்து மாற்றத்திலும், தமிழில் உள்ள ல-ள-ழ-ன-ந ண, ர, ற போன்ற ஒப்புடை ஒலிகள் மாற்றம்பெற்றும் சுவடிகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சுவடிகள் பல் வே று காலங்களில் படியெடுக்கப்பட்டன; அவற்றைப் படியெடுத்தோர் பலர்; அவர்கள் பல பகுதிகளில் வாழ்ந்தவர்களாதலால் வேறுபட்ட பேச்சு வழக்கினைக் கொண்டுள்ளனர். எனவே வல – இட மாற்றமும், கிளை வழக்குகள் தாக்கமும் இவ்வகையில் பாடபேதங்கள் உருவாக வழிவகுத்திருக்கக் கூடும்.

முனையின் — முணையின் (12, அடி 202)

ஆரா தட்ட — ஆறாதட்ட (2, அடி 100)

புல்லணற்காளை – புல்லனர்க் காளை (2, 138)

என்பன போன்று இன்னும் சான்றுகள் உள்ளன.

குத்தி — குற்றி (2, அடி 19, உரை)

நிழத்திய — நிழற்றிய (9, அடி 50)

என்னும் சொற்கள் இரண்டு வகையிலும் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்று எழுத்து வழக்காகவும், ஒன்று பேச்சு வழக்காகவும் அமைந்துள்ளன. வாய்மொழி வழி கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வந்ததாலும், பிற்காலத்தில் சிலர் அதைப் படியெடுத்தாலும் இரண்டு வழக்குகளும் ஏட்டிலும் இருந்ததைக் காண்கிறோம். இவ்வகை அமைப்பு முறையைப் பிற்காலச் சுவடிகளில் மிகுதியும் காணலாம். இவ்வழக்குகள் சில நேரங்களில் காரணங் கருதியும் அமையக் காண்கிறோம்.

வள்ளி தெய்வானை ஊஞ்சலின் (1, ப. 14) ஆசிரியர் அதன் இரண்டாம் பாடலின் அடிகளின் தொடக்கச் சொற்களை முறையே 'துசம் பெருகு', 'உசந்திடும்', 'இசைந்திடும்', 'வசனமணி' என அமைக்கின்றார். உயர்ந்திடும் என்ற சொல் துசம், இசைந்திடு, 'வசன' போன்ற சொற்களின் எதுகை நோக்கி உசந்திடு என அமைக்கப்பட்டுள்ளது.

துசம்பெருகு நவகயிலா சத்தில் வந்தே
தொசம்பிலகு மண்டபத்தில் சுருதி கூற
உசந்திடும் மாசனம்பொற்பீட மீதே
ஓங்கியசிங் காரமணி ஊஞ்சல் மேவி
இசைந்திடும் தாம்பரமேற் கட்டிச் சேர்த்து
இலங்குநவ ரத்தினத்தால் கட்டிச் சேர்த்து
வசனமணி மாதரசே ஆடீ ரூஞ்சல்
வள்ளிதெய்வ யானைமின்னே ஆடீ ரூஞ்சல்.

தருமபுரம் தேனமிர்தநாயகி ஊஞ்சலில் (பா, ம) செம்பவளம், பைம்பொன், உம்பர்புகழ் என்று பாடலின் தொடக்கச் சொற்கள் (அடிதோறும்) அமைவதைக் கொண்டு இன்பவயிடூரியம் என்பதை இம்பவயிடூரியம் என்றமைத்துள்ளார் ஆசிரியர்.

ஓரெழுத்து மாறிவருவது

செந்நெல் — செய்நெல் (2, அடி 230)
பிள்ளையைப் பெற்றால் — பிள்ளைப் பேற்றால்
(10, அடி 235 உரை)

என்பவற்றில் ஒரு எழுத்து புதிதாக இடம்பெற்றிருக்கிறது. இதனால் இச்சொற்களிடை பொருளும் மாறுபட்டு உள்ளது. இவற்றுள் பொருள் நோக்கிச் சிறந்ததைப் பதிப்பித்தல் வேண்டும். இவை போன்ற பிற நூல்களுக்கேற்ப மாறுபட்டு அமையலாம்.

சான்றாதாரங்கள்

1. அழகப்பபராசு, த., (பதி)., ஊஞ்சல் இலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.
2. உருத்திரங்கண்ணனார், பெரும்பாணாற்றுப்படை.
3. சண்முகம்பிள்ளை, மு., திருக்குறள் யாப்பமைதியும் பாட வேறுபாடும், சென்னைப் பல்கலைக் கழகம், 1971.
4. சாமிநாதையர், டாக்டர், உ. வே., என் சரித்திரம், எஸ். கல்யாணசுந்தரனார் (பதி)., கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1950.
5. சுப்பிரமணியம், பூ., சுவடியியல் - பாடவேறுபாடு, வாசக் கருத்தரங்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 23-5-1980 (அச்சேறா எழுத்துரை).
6. சொல்விளங்கும் பெருமாள், பூ., டாக்டர் உ. வே. சா. பதிப்புப் பணி ஓராய்வு, வஞ்சிக்கோ பதிப்பகம், 1981.
7. தாமோதரம்பிள்ளை, சி. வை., தாமோதரம் (பதிப்புரை), யாழ்ப்பாணம், கூட்டுறவுத் தமிழ்நூற் விற்பனைக் கழகம், 1971.
8. நக்கீரர், திருமுருகாற்றுப்படை.
9. நப்பூதனார், முல்லைப்பாட்டு.
10. பெருங்கௌசிகனார், மலைபடுகடாம்.
11. மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி.
12. முடத்தாமக் கண்ணியர், பொருநராற்றுப்படை.
13. George Arthus Burtick (Ed)., Interpreters Bible Vol. I, Abingdon Press, New York, 1939.

த. அழகப்பராசு
இளநிலை ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113.

திருமதி செ. இரா. பிரசன்னா
எம். ஃபில் ஆய்வுமாணவர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600 005.

வினைத் தொகையும் பெயரெச்சமும்

திரு அ. தட்சிணாமூர்த்தி எம். ஏ., எம் பில்., பி எட்.,
பேராசிரியர், புட்பம் கல்லூரி, பூண்டி.

வினைத் தொகையை விரிக்கும்போது பெயரெச்சமாக விரியும் என்றார் இளம்பூரணர். ஆனால், சேனாவரையர் வினைத்தொகை பெயரெச்சப்பொருள் தரும் என்பதனை ஒப்புக்கொண்டாலும் அதனை எச்சமாகக் கொள்ளலாகாது என்று தமக்கேயுரிய வகையில் காரணம் காட்டுகின்றார். ஆனால் வினைத்தொகையினைப் பெயரெச்சமாகவன்றி வேறு வகையாகக் கொள்ளச் சிறிதும் இடமில்லை என்பது தொல்லாசிரியரின் பாடல் வழி அறிய முடிகின்றது. வினைத் தொகையினைப் பெரிதும் செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சத்தின் திரிந்த வடிவமாகவே சங்கப் புலவர் கருதியுள்ளனர் என்பதற்கு நூற்றுக் கணக்கான சான்றுகள் உள்ளன.

சங்கப் புலவர்கள் பாடலில் வேண்டுமிடத்து வினைத் தொகையைப் பயன்படுத்தினர், எனினும் வேறு பல இடங்களில் அதற்கு ஈடாகச் 'செய்யும்' என்னும் எச்சத்தினையோ செய்த என்னும் எச்சத்தினையோ ஆண்டுள்ளனர். சில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பெறுகின்றன.

1. வேய்புரை பணைத்தோள் — அகம். 2.
   மலைப்புரை மாடத்து — மதுரைக்காஞ்சி. 406.
   உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சை — பெரும். 6.
2. வரைமருள் புணரி : பதிற்றுப் பத்து. 11:1
   வரைமருளும் உயர்தோன்றல் — மதுரை.46.
3. வினை நவில் யானை — புறம். 347:11
   வினை நவின்ற பேர் யானை — மது.47.
4. அறம்போழ் அவ்வளை ... பதிற்.
   சுரம் போழ்ந்த இகலாற்ற ... மதுரை. 58
5. பரந்தோங்கு சிறப்பிற் பாரி
   உயர்ந்தோங்கிய நிரைப் புதவின் மது. 65
6. பொன்மலி பாடலி... குறுந். 75:4
   பொன் மலிந்த விழுப்பண்டம்... மது.81.
7. வீறுசால் புதல்வர் ... பதிற்.
   மருதம் சான்ற மருதத்தாள்பனை ... மதுரை. 270
8. பொன் புனை வாளொடு ... மதுரை 434
   பசும்பொன் புனைந்த பாவை ... மதுரை 410.

9. அம்பு சேர் உடம்பினர் ... பதிற்
மதி சேர்ந்த மகவெண்மீன் ... பட்டி. 35.
10. துஞ்சு புலி இடறிய சிதடன் புறம் 73:7
திருத்துஞ்சும் திண்காப்பின் ... பட்டி. 41.
11. வேறுபடு வினையினும் ... தொல். சொல். சேனா. 53
வேறுபட்ட வினையோ வந்து ... பட்டி. 49.

மேற் காட்டிய சான்றுகளால் சங்கச் சான்றோர் செய்யும், செய்த என்னும் வாய்ப்பாடுகளால் அமைந்த பெயரெச்சத்தினையே செறிவு நோக்கி வினைத்தொகையாக ஆண்டனர் எனத் தெறியலாம். இத்தகு நிலைகண்டே இளம்பூரணர் பெயரெச்சமாக விரிக்க வேண்டும் என்று கூறினார்.[1] எனினும், சேனாவரையரின் கருத்தை ஏற்று அதற்கு அரண் செய்யும் கருத்துக்களைக் கண்டு கூறுவார் இன்றும் உள்ளனர். அங்ஙனம் கூறுவாரின் வாதத்திற்குச் சங்கச் செய்யுள் வழக்கும் உலக வழக்கும் துணை செய்யவில்லை என்க.

இலக்கிய ஆசிரியர்கள் வினைத்தொகையினைப் பெயரெச்சத்திற்கு மாற்றுகப் பயன்படுத்தியதற்குச் சான்றுகளைக் கண்டோம். இனி உரையாசிரியர்கள் எங்ஙனம் பொருள் கொண்டனர் எனக் காண்போம். திருவள்ளுவர் வினைத்தொகைகளை மிகுதியாக ஆண்டிலர். அவர் வினைத்தொகையினை ஆளுமிடமெல்லாம், பெரும்புலமைமிக்க பேராசானாகிய பரிமேலழகர் 'செய்யும்' என்னும் பெயரெச்சத்தையும் 'செய்த' என்னும் பெயரெச்சத்தையுமே விரித்துள்ளார்.[2] நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் ஆகிய பெருமக்களின் உரைகளைப் பயில்வாரும் இவ்வுண்மையினை உணரலாம். இது வெளிப்படையான உண்மையெனவே சான்றுகளை எடுத்துக் காட்டல் தேவையற்றதாகும்.

தொல்காப்பியர் தம் நூலுள் ஆண்டுள்ள வினைத்தொகைகள் பலவாகும். [3] இவ்விடமெல்லாம் பெயரெச்சப்பொருளே தோன்றும். வேறுவகையில் விரித்துக்கூற இடமே இல்லை. 'வருமொழி' என்பதனை' வந்து புணரும் சொல்' என்ற வாய்ப்பாட்டானன்றி விளக்க இடமில்லையாதல் காணலாம். நாம் 'நிகழ்காலம்' என்று வினைத்தொகயாக வழங்குவதனை ஆசிரியர் 'நிகழும் காலம்' என்றே வழங்குகிறார்.[4] எனவே வினைத்தொகையினைப் பெயரெச்சமாக விரிப்பதே அவர் கோட்பாடு எனவுணர்தல் எளிதேயாகும். இனிச் சோவரையர்க்கும் இஃது உடன்பாடு என்பதனை அவர் கூற்றினாலேயே உணரமுடியும். 'நிகழும் காலத்தும்' என்ற ஆசிரியர் கூற்றுக்கு, நிகழ்காலத்தும்' என்று வினைத்தொகை கொண்டே விளக்கம் தருகின்றுர்,[5] இன்றும் இவர் உரையைக் காண்கையில்

தம்மையறியாமலேயே வினைத்தொகை கட்டுப் பெயரெச்சப் பொருளே கொண்டார் என்பது தெரிகின்றது [6] எனவே, அவர் தம்மையும் அறியாமல் இளம்பூரணர் கருத்துக்கு அரண்செய்து விடுகின்றார்.

சேனாவரையர் வினைத்தொகையின் முன்மொழியினைப் பெயரெச்சத்தின் திரிந்தவடிவம் என ஏலாமைக்குச் சில காரணங்களைக் கூறுவார். அவை வருமாறு:-

1. வினைத் தொகையினை நிலைமொழி வருமொழிகளாக வைத்துப் புணர்க்கலாகாது. பிரித்துப் புணர்த்தால் தொகையின் பொருள் சிதையும். தொகையாற்றலால்தான் தொகைகள் பொருள் உணர்த்தும். அங்ஙனம் பிரித்துப்புணர்த்தல் ஆசிரியரின் கொள்கைக்கு முரணாகும்.

2. ஆசிரியர் வினைத்தொகையின் முன்மொழியினைப் பெயராகவே கொண்டுள்ளார். ஆகுபெயர் பற்றி விளக்குகையில் வினைத்தொகையையும் உட்படுத்தி இருபெயரொட்டு என்று கூறியுள்ளார். அன்றியும் உரிஞ், திரும் போன்ற வினைமாத்திரம் உணர்த்தும் சொற்களை அவர்தொழிற்பெயர்என்றே ஆள்கின்றார்[7]

இனி, இவ்விரு கருத்துக்களையும் ஆய்வோம். எழுத்ததிகாரத்தின் இறுதியில் இரண்டு புறனடைச் சூத்திரங்களை ஆசிரியர் அமைத்துள்ளார். அவற்றுள் [8] முதலது எழுத்ததிகாரத்தில் நிலைமொழி வருமொழிகளாக நிறுத்தில் புணர்க்கப்படாத சொற்கள் பற்றியதாகும். அவையாவன, 1. உயிரீறாகவும் மெய்யீறாகவும் அமையும் குறைச்சொற்களாகிய உரிச்சொற்கள். 2.உயர் திணை அஃறிணை பெயர்கள் பற்றி வரும் பண்புத் தொகைச் சொற்கள். 3. செய்யும், செய்த என்னும் இருவகை வாய்ப்பாடுகளாகவும் விரிக்கத் தக்க வினைத் தொகை. 4. தம் முன் தாம் வரும் 'பப்பத்து' போன்ற எண்ணின் தொகுதி.

இவையனைத்தும் மருவிய வழக்குடையன என்பது அவர் கருத்து. அதாவது, இயல்பான சொற்களல்ல என்பதாகும். இவற்றைத் தாம் புணிரியலில் வைத்துக் கூறாமைக்குக் காரணம் கூறுவதே அவருடைய நோக்கமாகும். ஆசிரியர் பெயரும் வினையுமாக அமையக் கூடிய முழுச்சொற்களையே புணரியலில் வைத்துக் கூறுவதனைத் தம் முறையாகக் கொண்டுள்ளார். எனவே குறைச் சொற்களாக உள்ள உரிச் சொற்களை அங்ஙனம் நிலை வருமொழிகளாக வைத்துக்கூற இயலவில்லை என்கிறார். அதுமட்டுமின்றி, உரிச் சொற்களைப் பெயர் என்றோ வினையென்றோ வேறுபடுத்திக் காண

முடியாது. அவை பெயரினும் வினையினும் மெய்தடுமாறும் இயல்பின.[9] பண்புத் தொகையிலும் முன்மொழி குறைச் சொல்லாகவே உள்ளது. எனவே உரிச்சொல்லுக்குச் சொன்னது இதற்கும் பொருந்தும். வினைத் தொகையைப் புணரியலில் கூறாமைக்கு வேறு காரணம் காட்டுகின்றார். இதனை விரிக்க வேண்டுமேல் 'செய்யும்' என்னும் புள்ளியீறாகவும், 'செய்த' என்னும் உயிரீறாகவும் விரிக்க வேண்டும். உயிரீற்றுச் சொற்கும், புள்ளியீற்றுச் சொற்கும் தனித்தனி இயல்களை அமைத்தார் ஆசிரியர். எனவே வினைத்தொகையினைப்பற்றி இரண்டியல்களில் கூறவேண்டும். மேலும் இடம் நோக்கி ஒவ்வொரு காலமும், முக்காலமும் விரிக்க இடமளிக்கக் கூடிய வினைத்தொகையை யாதேனும் ஒரு காலத்தை விரிக்குமாறு விதி செய்வது முறையன்று. இத்தகு காரணங்களால் அவர் விதியுள் அடக்கிக் கூற முடியவில்லை என்று கூறினாரேயன்றி அவற்றைப் பிரித்தலாகாது என்பது அவர் கருத்தன்று. ஏனெனில் எத்தொகையினையும் விரித்தே பொருள் கொள்ள வேண்டியுள்ளது, அவற்றை நிலைமொழி வருமொழிகளாக நிறுத்தியே அவற்றிடையே அமையும் தொடரியல் உறவினைக் காண வேண்டியுள்ளது. தொகைகள் அனைத்தையும் பிரித்துப் புணர்க்கலாகாது என்று அவர் ஒருபோதும் கூறவில்லை. வேற்றுமைப் புணர்ச்சியில் சொற்களை நிலைமொழிகளாகவும் வருமொழிகளாகவும் நிறுத்தியே ஆய்கின்றார். உவமத்தொகை, அன்மொழித்தொகை, உவமத் தொகையில் தம்முள் தாம் வரும் மொழிகள் தவிர்ந்த பிற ஆகியவற்றை இப்பட்டியலில் அவர் அடக்காமைக் காண்க. இவற்றில் பங்குபெறுவன முழுச்சொற்களாகவும், உயிரீறு மெய்யீறு எனப் படுத்துக் காணத்தக்கனவாகவும் உள்ளன.[10] உவமைத் தொகை பெயரெச்சப் புணர்ச்சியுள் அடங்கும். இன்றேல் வினையெச்சப் புணர்ச்சியுள் அடங்கும். உருப்புவளிப்படாவிட்டாலும் அவை இவ்விருவகை எச்சங்களாகவே விரிவனவாகும். உம்மைத் தொகையினை எண்கள் புணரும் நிலையிலும் பிற இடங்களிலும் காணலாகும்.[11] தொகைகள்பிரிவுபடாது ஒருசொல் போல் நடப்பது பற்றிச் சொல்லதிகாரத்திலேயே கூறுகின்றார்.[12] இங்கும், அவை எழுவாயாகும் போதும், வேற்றுமை ஏற்படும்போதும் தனிப்பெயர் போல நடக்கும் என்ற கருத்துடையவரேயன்றி அவை என்றும் பிரிக்கப்படத் தக்கவை அல்ல என்ற கருத்துடையவராகார். சொற்களுக்கு இரு நிலைகள் உண்டு. ஒன்று சொல்லைத் தனியே காணும் நிலை, மற்றொன்று அது மொழியில் இயங்கும் நிலை. (Functional level) சொல்லமைப்பால் முற்றாக உள்ளது இயங்கும் நிலையில் எச்சமாதல் உண்டு. (கண்டனன் சென்றான்) இங்ஙனம்

தொகைகள் இயங்கும் நிலையில் ஒரு சொல்போல் நடப்பன என்பதுதான் அவர் கருத்தாகத் தோன்றுகின்றது. சேனாவரையரின் முதற்கருத்தின் பொருத்தமின்மையை இதனால் உணர்கின்றோம்.

பவணந்தி முனிவர் பண்புத்தொகையினைப் பகுத்துக்கண்டுள்ளமையினையும் இதனோடு இணைத்துக் காணலாம்.[13] இதற்கு அவர் ஒருநல்ல முறையினைக் கையாண்டார். பண்புத்தொகையின் முன் மொழிகளை அவர் 'மை'யீருகக் கொண்டார் என்பதே அது. இளம்பூரணரின் கருத்தை மறுக்கவேண்டும் என்னும் உணர்ச்சி மேலோங்கியிருப்பதே நாம் சேனாவரையரிடம் காண்பதாகும். இதற்குத் தக எழுத்ததிகார நூற்பாவுக்கு விளக்கம் கண்டுள்ளார்.

இனி, வினைத்தொகையின் முன்மொழி பெயரே என்ற அவர் கருத்தைக் காண்போம். இருபெயரொட்டாகு பெயரில் வினைத் தொகையும் அடங்கும் என்பது அவர் கருத்து. இங்கு இருபெயரொட்டு என்பது அன்மொழித்தொகை என்பது இவர் கருத்தாகும்.[14] இதற்கு மாறான கருத்தும் உண்டு. தெய்வச்சிலையார் கருத்து வேறுபடுகின்றார்.[15] வாதத்துக்காக அன்மொழித்தொகையையே இருபெயரொட்டு என்கிறார் என ஒப்புக்கொள்வோம். தொல் காப்பியர்க்கு இஃதுடம்பாடு எனில் அன்மொழித்தொகை பற்றிய நூற்பாவில் வினைத்தொகை அடியாகவும் அன்மொழித்தொகை பிறக்கும் என்று கூறியிருக்கவேண்டும். அவர் அங்ஙனம் கூற வில்லை.[16] உரையாசிரியர்களே வினைத்தொகையடியாகவும் அன் மொழித்தொகை பிறக்கும் என்று இலேசாற் கொள்கின்றனர். எனவே, இருபெயரொட்டில் வினைத்தொகையை உளப்படுத்தினார் என்று சேனாவரையர் கூறுவது ஆசிரியர் கருத்துக்கு முற்றும் மாறானதாகும். எனவே அன்மொழித்தொகையை இருபெயரொட்டு என்று கொண்டாலும்கூட வினைத்தொகையினை அதில் உட்படுத்த முடியவில்லை என்பது விளங்கும். விளங்கவே தொல்காப்பியர் வினைத்தொகையின் முன்மொழியைப் பெயர்ச்சொல்லென்று கருத வில்லை எனத் தெரிகின்றது. அன்றியும் அன்மொழித்தொகை என்று ஒரு குறியீடிருக்க இரு பெயரொட்டு என்று வேருெரு குறியீட்டினை வழங்கியிருக்கவேண்டா. மேலும் அன்மொழித் தொகையினை இருபெயரொட்டாகு பெயர் என்று கூறுவது சேனாவரையர் தம்மைத்தாமே மறுப்பதாயும் அமைகின்றது. பண்புத்தொகையில் செம், கரும் போன்ற பண்படிகளே பெரிதும் முன்னிற்கின்றன. இவைமுழு சொற்களல்ல. 'கொல்யானை' போன்றவற்றில் உள்ள தொழில் மாத்திரமுணர்த்துவன என்று அவர் கருதும் சொற்கள் போல வினைத்தன்மை மிக்க சொற்களுமாகா. எனவே இக்குறைச்சொற்களைப் பெயர் என்று அவர் ஏற்பதாய்

முடியும். ஆனால் இவை ஆசிரியர் கருத்தின்படிப் பெயருக்கும் வினைக்கும் அடியாக அமையத்தக்கனவாகும். பண்புத்தொகை யினைப் பிரித்துப்புணர்த்தாலன்றி முன்னுள்ளது பெயர் என்றுகூற முடியாமை காண்க. ஆனால் சேருவரையார் 'செம்மை' 'கருமை' போன்ற பண்புப் பெயர்களை நினைக்கிறார். இவர் இங்ஙனம் நினைப்பது சரியெனில் இளம்பூரணார் 'கொல்'என்னும் வினை யடியைக் கொன்ற, கொல்லும் என்று நினைப்பதும் சரியாய் முடிதல் நோக்கியுணர்க ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் வெவ்வேறானவை என்றும் சிவஞானமுனிவர் கருத்தை இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

இனி, வினை மாத்திரம் உணர்த்தும் சொற்கள் அனைத்தும் பெயர்ச்சொல் என்பது ஆசிரியர் கருத்து என்ற சேனவரையரின் கருத்தை ஆய்வோம். 'உரிஞ்' போன்றவற்றைத் தொழிற்பெயர் என ஆசிரியர் கூறியது உண்மையே. ஆனல் எல்லாச் சொற்களும் தொழிற்பெயர் என்பது ஆசிரியர் கருத்தெனின் மொழியீருகும் பதினேரெழுத்திற்கும் இங்ஙனம் விதி செய்திருப்பார். அங்ஙனமின்றி ஞ, ண, ந, ம, ல, ள, என்னும் ஆறு ஈறுகளில் மட்டுமே தொழிற் பெயர் பற்றிப்பேசுகிறார்.[17] எனவே இவ்வீறுகளில் அமைந்த சில சொற்கள் முதனிலைத் தொழிற்பெயராக அவர் காலத்தில் வழங்கின என்றும், அவற்றை நினைத்தே விதிசெய்தார் எனவுமே கருத வேண்டும். இங்ஙனம் அவர் கூறியபோது அவர் வினைச்சொல்லா கவும் வரும் என்ற நிலையினை மறுத்ததாகக் கொள்வதற்கில்லை. வினையடிகளே பெயர்களாக நிற்கும் எனில் எண்ணற்ற தொழிற்பெயர் விதிகட்குத் தேவையேற்பட்டிருக்காது. வினை யடிகள் உணர்வு, புணர்ச்சி, செய்தல், செய்கை சார்பு என்றவாறு விகுதி புணர்ந்தும், பேறு, ஊறு, வீடு என்றவாறு திரிபுற்றும் பெயராகின்றன. சில சொற்களே சொல், அடி, குத்து, பழி என்ற வாறு வருமிடத்தால் மட்டுமே பெயராகவும் இயங்கும் ஆற்றல் பெற்றுள்ளன. இத்தகையன ஒருவேளை மொழியின் தொடக்க கால நிலையின் எச்சமாதல் கூடும். இவையும் ஏனையவை போலவே விகுதி ஏற்கின்றன. பழிப்பு, அடித்தல் என்றவாறு அமையும். இங் ஙனம் வினையிலிருந்து அமையும் பெயர்களும் கூட வினைத் தன்மை மிக்கனவாகவே உள்ளன. 'உணர்ந்து செய்தல்' என வினைச் சொல்போலவே வினையெச்சம் ஏற்று வருதல் காண்க. எனவே இவை வினைத் தன்மையுடனே நிற்றல் இவை வினையிலிருந்து பிறந்தன என்பதனை நிலை நாட்டுகின்றன. அடிச் சொற்கள் பெயருக்கும் வினைக்கும் பொதுவானவை எனவும், பெயர், வினை ஆகியவற்றுக்குத் தனித்தனி உரியவை என்றும் உள்ளமையை

மொழியறிஞர் எடுத்துக் காட்டுகின்றனர்.[18] எனவே அனைத்தும் பெயர் என்றல் பொருந்தாது.

இனி, வினைத்தொகையின் முன்உறுப்பாக வருவன அனைத்தும் வினைவேர் என்றோ வினையடியென்றோ கொள்ள முடியாது என்றும், வேர்கள் அல்லாதனவும் வினைத்தொகையமைய உதவுகின்றன என்றும் அறிஞர் கூறுவர். வருந்து, பயிற்று என்பன வேர்கள் அல்லவெனினும் வினைத்தொகையின் முதலுறுப்பாக வரும் என்றும், போ, பார் என்பன வேர்களே எனினும் வினைத் தொகையமைக்க உதவவில்லை என்றும் கூறுவர்.[19] இது முற்றும் சரியே எனினும் இதில் இன்னொரு நிலையுள்ளது. வினைத்தொகையின் முதலுறுப்பாய் வரும் அனைத்தும் ஏவலாக வரத் தகுதியுடையனவாம். அங்ஙனமேல் அவை வினைச்சொல் என்பதனை மறுக்க முடியாதன்றோ ! இதுபற்றியன்றே நன்னூலார் இவற்றைச் செய்யெனேவல் வினைப்பகாப்தங்கள் என்றழைத்தார்.மேலும் இவை வியங்கோள் விகுதிகளையும்,கால இடை நிலைகளையும் எதிர்மறை, இடை நிலைகளையும், ஏற்கின்றன. இதனை விட இவை வினை என்று நாட்ட வேறுசான்றும் வேண்டுமோ !

போரசிரியர் டாக்டர். பொன். கோதண்டராமன் அவர்கள் சேனாவரையரின் கருத்தினைத் தழுவி வினைத்தொகையின் முதலுறுப்பினை ஒருவகைப்பெயர் என்கின்றார்கள்.[21] இக் கருத்தினை ஆய்வது மிகமிக இன்றியமையாதது. வினைத்தொகை பற்றி ஆழமாக ஆய்ந்துள்ள அறிஞர்களில் இவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். பெயரெச்சம் ஒன்றையொன்று தொடர்வதில்லை. இதன் அடிப்படையில் இதுவரையில் யாரும் மேற்கொள்ளாத புதிய அணுகுமுறையைப் பயன்படுத்தி வினைத்தொகையினை ஆய முயன்றுள்ளார். "வரிப்புனை பந்து" (நற்றிணை. 12) என்பதனை இதற்குத் துணையாகக் கொண்டார். இதனை, இளம்பூரணர் கருத்தையொட்டி விரித்தால் 'வரிந்த புனைந்த பந்து' என்றாகுமென்றும், இது பெயரெச்சங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வருவதாய் முடியும் என்றும் கூறி, பெயர்கள் எத்துணையாயினும் தொக்கு ஒரு தொடராய் அமையும் இயல்பின எனவே இவை பெயர்களாகவே கருதத்தக்கன என்றும் கூறுகின்றார்கள். வரி, புனை இரண்டும் தொகையாகிப்பின் 'பந்து' என்பதோடு தொக்கு நிற்கின்றன என்கின்றார்.([21]அ) இனி, இதனை ஆய்வோம்.

முதலிரு சொற்களும் தம்முட்டொக்கு மூன்றாம் சொல்லோடு தொக்கனவெனில் அவை உம்மைத்தொகை படவே தொக முடியும். வரியும் புனைவும் பந்தும் என்று விரியும். இவ்விடத்தில் பேசப்

படுவது பந்தொன்றே. முன்னிற்கும் இரண்டு சொற்களும் இரு வேறு பொருள்களைக் குறிப்பதாகக் கொள்ள இடமில்லையாதலை நோக்குக. எனவே முன்னிரு சொற்களும் பின்னுள்ள சொல்லைச் சிறப்பிப்பன என்று கொள்கிறோம். அங்ஙனம் சிறப்பிக்கும்போது பெயராக நின்றும் சிறப்பிக்கலாம்;பெயரெச்சமாக நின்றும் சிறப்பிக்கலாம் ஆனால் இரண்டும் பெயரெச்சமாக நின்று சிறப்பிக்க இயலாது. 'உழைத்து வளர்ந்த மனிதன்' என்றவாறு வினையெச்சம் + பெயரெச்சம் + பெயர் என நின்று சிறப்பிக்கலாம். இல்லையேல் 'பொன்புனை பாவை' என்றவாறு பெயர் + பெயரெச்சம் + பெயர் (பொன்னால் புனைந்த பாவை) என்று வரலாம். வேறுவகையாக வரமுடியாது இங்குக் கூறிய முறைகளில் முன்னதைப் பெயர் என்று வாதத்திற்கு ஒப்புக்கொண்டாலும் இரண்டாவது சொல்லைப் பெயரெச்சப் பொருள்படவே விரிக்கமுடியும். 'வரிதலால் புனைந்த பந்து' என்று விரியும். எனவே மூன்றும் பெயர் என்பது பொருந்தாது. எனவே வினையெச்சம் + பெயரெச்சம் + பெயர் என்றே விளக்க முடியும். எனவே 'வரிந்து புனைந்த பந்து' என்று விரியும். முன்னிரு சொற்களும் வினையெச்சத் தொடராகிப் பந்து என்பதனோடு பெயரெச்சப் பொருள் படப்புணர்தலைக் காணலாம். இதுபோல் வருமிடமெல்லாம் உரையாசிரியர்கள் இங்ஙனமே பொருள் செய்கின்றனர். கலத்தொகையில் வரும் ''வரிபுனை வல்வில்'' (கலி. 104-58) என்பதற்கு ''வரிந்து புனைந்த வில்'' என்றே நச்சினார்க்கினியர் விளக்கம் தந்தார். பந்தும் வில்லும் வரிந்து கட்டப்படுவன என்பது நினையத்தக்கது. அகநானூற்றில் வரும் இத்தகைய தொடருக்குப் பெருமழைப் புலவரும் இங்ஙனமே பொருள் செய்வார் (அகம் 48—12) ''அரிபுகுபொழுது'' (பெரும்.202) என்பது 'அரியப் புகும் பருவத்தில்' என்று பொருள் படுதலும் நோக்குக. இவ்வாட்சிகளைக் காண்கையில் வினையடிகள் பெயராகவும், பெயரெச்சமாகவும் ஆவதுபோல் வினையெச்சமாகவும் செயற்பட்டன என்பது விளங்கும். அன்றியும் இன்னொன்றனையும் இங்குக் குறிப்பிட வேண்டும். வினைத்தொகை என்று நாம் கருதுவது **கொல்யானை** என்றாற்போல இருசொற்கூட்டினையே. இதனைப் பெயரெச்சத் தொடராக விரிப்பதில் பொருள் உண்டு. கொல் என்பதற்கு அடையாக வருவதனையும் பெயரெச்சமாக விரிப்பதும் அங்ஙனம் விரித்துக்கண்டு அது தமிழிலக்கண மரபுக்கு முரணாவது கொண்டு வினைத்தொகை பெயரெச்சமாகும் என்பதனை மறுப்பதும் பொருந்துவதாகத் தெரியவில்லை. 'வரி புனைபந்து' 'என்பது ஓங்கி உயர்ந்த மலை' என்றாற் போல வந்ததேயாகும். இதனை அறிஞர் சிந்திப்பாராக. மேலும் 'வரி' யென்பது 'புனை' என்பதோடு பெயராக நின்று புணர்ந்திருந்தால்

(புனை பெயராகக் கொள்ளப்பட்டால்) 'வரிப்புனை' என்று ஒற்று மிகுந்து வரவேண்டும். மாறாக 'வரிந்து' என்னும் வினையெச்சப் பொருட்டாய் வந்தமையின் ஒற்றுமிகவில்லை.[21] ஆ 'வரிப் பந்தசைஇ' (பெரும். 333) என்ற இடத்தில் ''வரித்தலை உடைய பந்தையடித்து'' என்று நச்சினார்க்கினியர் எழுதுவது நோக்கி யுணர்க.

இனி, வினைத்தொகையில் பொருள் படுமாற்றைச் சிறிது எண்ணுவோம். 'கொல்யானை' என்பதனைக் கொன்றயானை, கொல்லுகிறயானை சொல்லும்யானை என்று காண்பது பிழையென் பதும், கொல்லுதல் யானையின் இயல்பு என்பதனைச் சுட்டுவதே இதன் நோக்கம் என்பதும் இங்ஙனம் பிரித்துக்காண்கையில் இதன் தொகைப் பண்பு சிதைகிறது என்பதும், எனவே இதில் காலக்கூறு உண்டென்று கூறுவது ஆகாது என்பதும் இது பெயரெச்சமாக பிரிக்கத்தக்கது அன்று என்றும் டாக்டர் பொற்கோ அவர்கள் கூறு வதும் ஆயத்தக்கதாம். பெயரெச்சமாகவே பிரிக்கப்படுகின்றது என் பது இக்கட்டுரையின் முற்பகுதியில் விளக்கப்பட்டதை நினைவு கூர்க. கொல்யானை, கடிநாய் போன்ற ஒருசில வினைத்தொகைக்கு இவ்விளக்கம் மிகப் பொருத்தமானதே. எனினும் இதில் இம் முக்காலப் பொருள்மையும் அடங்கியிருக்கிறது என்பதே அதாவது இடம் நோக்கி ஒவ்வொரு காலத்தை விரிக்கும் வகையில் பொது வடிவமாக நிற்கிறது என்பதே இளம் பூரணர் கருத்தாகும். ஒரு பொருளின் பண்பு என்பது அது தோன்றிய காலம் முதற்கொண்டு அதனோடு கிடந்து அஃது அழியும்போது அழிவது என்பர். எனவே அது முக்கால உண்மை யாகும். முன்னும், தற்போதும், பின்னும் யானை கொல்லும் இயல்புடையது என்று காட்டுவதே இளம்பூரணர் கருத்தாகும். எனவே இதில் முரண்பாடில்லை. இதனால்தான் ஆசிரியரும் மூன்று காலத்திலும் ஒத்தியல் பொருளைச் 'செய்யும்' என்னும் முற்றாற் கூறுக என்றார். இதைச் செய்யும் என்னும் முற்றுக்கும் அவ்வாய்பாட்டுப் பெயரெச்சத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு.[18] எனவே 'செய்யும்' என்னும் பெயரெச்சமும் இயல் பினை உணர்த்தும். முக்காலப் பொருண்மையைத் தன்னுள் அடக்கி யுள்ளது எனலாம் ''ஒளிரும் மதி'' என்றால் அது எப்போதும் ஒளிவிடுவது என்றே பொருள்படும், இதனை 'ஒளிர்மதி' என்பதும் சுட்டும்.

இனி, வினைத்தொகை இம்முக்காலப் பொருண்மையாம் பொருட்பண்பினை மட்டும் குறிக்கப் பயன்பட்டதன்று. இடம் நோக்கி ஒவ்வொரு காலமே சுட்டுமிடங்களும் மிகப்பலவாகும். மணிமேகலையில் வரும் ''ஓடிமரம் பற்றி ஊர்திரை உதைப்பு''

என்பதில் 'ஓடிந்தமரம்'என்ற பொருள் மட்டுமே விரியும். இவ்வாறே ''மறைக்குவன் பெரும நிற் குறித்து வருவேலே'' (புறம். 290) என்று ஔவையார் கூறுகையில் ''எதிர் காலத்தில் உன்னைக் குறித்து வரக்கூடிய வேலைத் தன் மார்பில் தாங்குவான்'' என்ற எதிர்காலப் பொருளே விரியும். ''உகுநீர்'' என்பது தற்பொழுது உகுகிற நீர் என்ற பொருள் தரலுண்டு.

'கொதிநீர்' என்பது இப்பொழுது கொதித்துக் கொண்டிருக்கும் நீர் என்று பொருள்படுமேயன்றி எப்போதும் கொதித்தல் நீரின் இயல்பு என்றல் பொருந்தாதன்றோ ! எனவே வினைத்தொகை, பொருட்பண்பை விளக்கும் நிலையில் மட்டுமன்றி. ஒவ்வொரு காலத்தைக் குறிக்கும் நிலையிலும் வரும் எனக் காண்கின்றோம்.

இதுவரையில் கூறியவற்றின் சுருக்கம் வருமாறு :-

1. வினைத்தொகை சில பொருள்களின் பண்பினை இயல்பினைச் சுட்டுகையில் பொருண்மை பிண்டமாகவுள்ளது. அதாவது மூன்று காலமும் அடங்கியுள்ளது.

2. ஏற்ற இடங்களில் ஒவ்வொரு காலத்தையே சுட்டும் இயல்புடையது.

3. பெயரெச்சமாகவே இலக்கிய ஆசிரியர் ஆண்டுள்ளனர். உரையாசிரியரும் பெயரெச்சமாகவே விரிப்பர். சேனாவரையர்க்கும் இது பொருந்தும்.

4. '' புணரியல் நிலையிடை '' என்னும் சூத்திரம் சிலவற்றைப் புணரியலில் விளக்க முடியாமையைச் சுட்டுவதேயன்றிப் பிரித்தல் கூடாது எனத் தடை விதிப்பதன்று.

5. வினைத்தொகையை இருபெயரொட்டு ஆகுபெயர் என்று ஆசிரியர் கருதியதாகக் கூறுவது பொருந்தவில்லை.

6. எழுத்ததிகாரத்தில் ஆசிரியர் தொழிற் பெயர் எனக்குறிப்பிடுவன பெயராகவும் சிலபோது இயங்கும் வினைச்சொற்களே.

7. 'வரி புனை பந்து' என்பது வினையெச்சம், பெயரெச்சம், பெயர் என்ற நிலையில் அமைந்த தொடர்.

எனவே வினைத்தொகை பெயரெச்சமாகக் கொள்ளத் தக்கதே என்றும் அதன் முதற் கூறு வினையேயன்றிப் பெயரன்று என்றும் முடிவு செய்யலாம்[14] இது முடிந்த முடிவன்று. மேலும் ஆய்ந்து காணவேண்டியதேயாகும்.

குறிப்புகள் :

1. தொல், சொல். இளம்பூரணர் 110 உரை
2. குறள். 5, 38, 734, 172
3. பொதுப்பிரி பாற்சொல். சேனா. 44,
   ஒன்று வினை— சொல் 54
   மொழி கிளவி— சொல் 55
   பெயர் தோன்று நிலையே . சேனா 65
   வேறுபடு வினை.. சேனா 53.
   பாலறி மரபின் ... சேனா 211. இன்னும் பல.
4. சொல், சேனா. 240 : 2, 241 : 1.
5. சேனா. ஷ. சூத்திரங்களின் உரைகள்
6. பெயர்தோன்று நிலை—பெயர் தோன்றிய துணை. 65
   ஒன்று வினை—வேறுபடாது தோன்றும். 54.
   வேறுபடு வினையினும்—வினை வேறுபடும் பல பொருளொடு சொல்...53.
   ஆகு இடன் இன்றே - பொரும் இடம் உடைத்தன்று
   பண்பு கொள் பெயர்—பண்படுத்து வழங்கப்படும் பெயர்.
   பொருள்செல் மருங்கின்—பொருள் செல்லும் பக்கத்து. 106.
   விளிகொள் பெயர் — விளிகொள்ளும் பெயர்
   எய்திடன்— எய்தும் இடம்
   மாவென் கிளவி—மாவென்னும் இடைச்சொல். 273
7. சேனா. 415 உரை
8. எழுத்து, நச்சி, 482, 483.
9. சேனா. 297
10. முழுச் சொற்களையே ஆசிரியர் பெயர், வினை எனப் பெயரிட்டழைப்பார் காண்க. "உரிச்சொல்" தெ. பொ. மீ. இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் — 1. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974, பக். 121-122.
11. "போல புரைய" என்னும் பொருளதிகாரச் சூத்திரத்தின் இளம்பூரணர் உரையைக் காண்க.
    தெய்வச்சிலையார் கருத்தும் இதுவே. பக். 165, 166.
12. சேனா. 420.
13. நன்னூல். 135.
14. சேனா. 114 , 415.
15. ஆகுபெயர் பற்றிய நூற்பாவுரையில் துடியிடை போன்ற வற்றையே இருபெயரொட்டு என்கின்றார்.
    தெய்வச். 111 விளக்கவுரை காண்க.
16. "பண்புதொக வருஉம் கிளவி யானும்
    உம்மை தொக்க பெயர்வயி னானும்
    வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
    ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே"
    — சேனா. 418.

17. ஞ, ந, ண, ன, ம, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினோரெழுத்தும் மொழியீறாகும். இவற்றுள் ஞ ண, ந, ம, ல, ள என்னும் ஈறுகளில் மட்டும் தொழிற்பெயர் பற்றிப் பேசினார். உயிரீற்றுப்புணர்ச்சிக்கண்ணும் அவர் இதனைப் பேசாதொழிந்தார்.
18. பேராசிரியர் மு வ. அவர்களின் மொழிநூலில் அடிச்சொல் பற்றிய பகுதியைக் காண்க.
19. 'இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்' – 1. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974, பக். 156—157
20. நன்னூல். 137
21. இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், பக்கம் 157—58
21. (அ) ,, 157—58
21. (இ) தெ, பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழ்மொழி வரலாறு, பக். 136
22. இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் பக். 155 156
23. பயனிலை எழுவாய்க்கு, முன்னரும் வருவது பண்டைய நிலை என்றும் அவ்வாறு வந்தபோது முற்று பெயரடையாகக் கருதப் பட்டது என்றும் பேராசிரியர். தெ. பொ. மீ கருதுவார். 'தமிழ்மொழி வரலாறு'. பக். 113
24. பேராசிரியர். தெ. பொ மீ. தமிழ்மொழி வரலாறு, பக். 136

பொழில் அன்பர்கள் கவனத்திற்கு

எதிர்பாரா நிகழ்வுகளினால் காலத்தில் தமிழ்ப்பொழில் மலர்கள் அன்பர்களுக்கு அனுப்பி வைப்பதில் நேர்ந்துள்ள காலத் தாழ்வினுக்கு மிக மிக வருந்துகிறோம் எதிர்வரும் மாதங்களில் காலக் கழிவைச் சீர் செய்து ஒவ்வொரு திங்களும் தவறாது பொழில் மலர்கள் மலரும் என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பொழில் அன்பர்கள் பொறுத்தருள்வார்களாக.

மற்றும், பொழில் அன்பர்கள் பொழில் 1983 – 84-ஆம் ஆண்டு கையொப்பத் தொகையினை இதுவரை அனுப் பாதவர்கள் கையொப்பத் தொகை ரூ.20/-யும் விரைவில் 'தலைவர்,'' கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்தட்டாங்குடி, தஞ்சாவூர் 613 002, என்ற முகவரிக்கு அனுப்பி ஆதரிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். நன்றி.

ஆசிரியர்.

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்

3. திரு புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர். சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர், சென்னை.

7. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு. எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு		வெளி நாடு
1. ஆண்டு வரி	...	20—00	...	030—00
2. தனி இதழ்	...	02—00		
3. ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	...	100—00

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு. ....

அவர்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம் கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.